மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

4 | 1 - 8 - 55 | இதழ் 7

வலன் கோட்டையில் பட்டினிப் பட்டாளம்!

நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

ஒரே மேடையில் பேச போட்டியாளருக்கு அழைப்பு

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வெளியேறிய பிறகு, நண்பர்களின் தூண்டுதலின்பேரில் சென்னை நகரசபைத் தேர்தலில் ஈடுபடும்படி நேர்ந்தது. பெத்து நாய்க்கன்பேட்டைத் தொகுதியில், காங்கிரசை எதிர்த்து, நகர சபை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டார்கள்.

காங்கிரசின் சார்பாகப் பாலசுப்பிரமணிய முதலியார் என்பவர் போட்டியிட்டார். அவரும் ஒரு எம். ஏ. பட்டதாரி என்றாலும், அவருக்கு அவ்வளவாகப் பேச வராது. பொதுமேடை என்றாலே அவருக்குத் துடை நடுக்கம் ஏற்பட்டுவிடும். அப்படியே அவர் பேச முயன்றாலும், ஓரிருசொற்கள் திக்கித்திக்கிப் பேசுவார். ஆனால், அறிஞர் அண்ணா அவர்களோ, அப்பொழுதே ஈடு இணையற்ற பெரும் பேச்சாளராக விளங்கினார்கள்.

அண்ணா அவர்கள் தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசும்போது, பொது மக்களைப் பார்த்து, " நகரசபை, நீக்கவேண்டிய குறைபாடுகளையும் செய்யவேண்டிய நிறைபாடுகளையும் எடுத்துச்சொல்லி, நீதிக்குப் பரிந்து பேசிச், செயலாற்றவேண்டிய இடமாகும். இந்தப் பணியினைப் பேசும் ஆற்றல் படைத்தோரே செயலாற்றமுடியும். எனவே தேர்தலில் போட்டியிடும் எங்களிருவரையும் ஒரே மேடையில் பேசச் சொல்லிப் பார்த்து, யாரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது ஏற்றது என்ற முடிவுக்கு நீங்களே வாருங்கள் " என்னும் கருத்துப்பட குறிப்பிட்டார்கள். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த பொதுமக்களில் சிலர், ஒருநாள் காலை நேரத்தைக் குறிப்பிட்டுச், சிவஞானம் பூங்காவில், தேர்தலில் போட்டியிடும் அண்ணாவும், பாலசுப்பிரமணிய முதலியாரும் ஒரே மேடையில் பேசுவார்கள் என்று துண்டு அறிக்கைகள் அச்சடித்து வெளிப்படுத்திவிட்டனர்.

துண்டு அறிக்கையில் கண்டபடி குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் சிவஞானம் பூங்காவில் ஏராளமான பொதுமக்கள் கூடிவிட்டனர். அறிஞர் அண்ணா அவர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேர்ந்தார்கள். காங்கிரசின் சார்பாகப் போட்டியிட்ட தோழர் பாலசுப்பிரமணிய முதலியார், அண்ணாவோடு ஒரே மேடையில் பேச அஞ்சிக், கூட்டத்திற்கு வர மறுத்து, எங்கேயோ மறைந்து இருந்துவிட்டார். தேர்தலில் மும்முரமாக ஈடுபட்டு வேலைசெய்துவந்த காங்கிரசுத் தோழர்களுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. கூட்டத்தினர் " எங்கே காங்கிரசு அபேட்சகர்?" " எங்கே பாலசுப்பிரமணிய முதலியார்?" என்று காங்கிரசுக்காரர்களைப் பார்த்துத் திரும்பத்திரும்பக் கேட்கத்தொடங்கினர். நீண்டநேரமாகியும், காங்கிரசு அபேட்சகர் வராததால், அறிஞர் அண்ணா அவர்கள் மட்டுமே கூட்டத்தில் பேசி முடித்தார்கள். மக்கள் மன்றம், அண்ணாவே வெற்றிபெற்றார் என்று தீர்ப்பளித்து வெற்றி முழக்கம் செய்தது.

நேரே ஆராய்ந்துபார்த்த மக்கள் மன்றம், அறிஞர் அண்ணா அவர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பு அளித்தது ; ஆனால் நேரே ஆராய்ந்துபார்க்காத வாக்குரிமைச் சீட்டுகள், வேறுவிதமாகப் பிற்பாடு தீர்ப்பு அளித்தன !

மன்றம்
இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

1-8-55 திங்கட்கிழமை

இந்தி எதிர்ப்பு

இந்தி, நேரிடையாகவோ அல்லது மறை கமாகவோ, தென்னாட்டில் வேரூன்றிச் சிறிது றிதாக ஆதிக்கம் செலுத்தும் நிலையை ளுக்குநாள் பெற்றுவருகிறது.

இந்தி, எந்த அளவிலும், எந்த வகையிலும், ந்த வழியிலும், எந்த இடத்திலும், எந்த ளிலும் திராவிடத்தைப் பொறுத்துத் தவைப்படாத ஒரு மொழியாகும் என்பதை ம் அடிக்கடி காரணகாரிய விளக்கங்கள் காட்டித் தெளிவுபடுத்தி வருகிறோம்.

இந்தி நேரிடையாகவோ அல்லது மறைமுக ாகவோ, விரைவாகவோ அல்லது மெல் வோ, ஆதிக்கம் செலுத்தும் மொழியாக ஆகக்கூடாது என்பதையும் வற்புறுத்தி ருகிறோம்.

வடநாட்டு ஆதிக்கக்காரர்கள், எல்லா ரிமைகளையும் ஒருங்கே படைத்து விளங்கும் இந்திய அரசாங்கத்தின் துணையைக்கொண் ம், எங்கும் பரவியுள்ள காங்கிரசு அமைப் ன் துணையைக்கொண்டும், எல்லாவகையிலும் குறைபாடுடைய தங்கள் தாய்மொழியாம் இந்தி மொழியை, எங்கணும் ஆதிக்க மொழி யாக்கி அகமகிழ்ச்சி கொள்வதிலே கண்ணுங் கருத்துமாக இருந்துவருகின்றனர்.

இந்தி மொழியின் ஆதிக்கம் திராவிடத்தில் ற்படுமாயின், தமிழும் பிற தென்னாட்டு மொழிகளும் இதுவரையில் இருந்த அடிமை நிலையிலேயே இருக்கவும், இன்னும் சீரழிந்து போகவும், ஆன நிலைக்கு வந்து சேரும் என்பதை அறியா மக்களும், வடநாட்டு ஆதிக்கத்துக்கு அடிமைபோன மக்களும் தென்னாட்டில் இப்பொழுது கவலையற்றிருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிடக் கழகமும்தான் இந்தி தேவையற்ற ஒரு மொழி என்பதை உணர்ந்தும், அதன் ஆதிக்கத்தால் திராவிட மொழிகளின் வளர்ச்சி குன்றும் என்பதை அறிந்தும், இந்தி திராவிடத்திற்கு அறவே கூடாது என்று சொல்லி, தம் வலிவுக்கேற்ப இந்தி நுழைவை எதிர்த்துப் போராடி வருகின்றன.

இந்தி மொழி ஆதிக்கம் திராவிடத்தை என்றென்றும் வடநாட்டிற்கு அடிமை நாடாக ஆக்கிவிடுமாதலால், திராவிடத்தைத் தனி நாடாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நாம், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஒழிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய நான்கு திராவிட மொழிகளும், இன்றைய நாட்டியல்—உலகியல் வாழ்க்கையை இனிது நடத்த ஆங்கிலத்தின் துணை ஒன்றைமட்டும் பெற்றால் போதும், இந்தி மொழியின் துணை எள்ளளவும் தேவையில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் உள்நாட்டுத் தொடர்பு அனைத்திற்கும் தமிழ் போதும்; தமிழகத்தைத் தவிர்த்த உலகிலுள்ள பிற வெளிநாடுகள் அனைத்தோடும் எல்லாவகையிலும் தொடர்பு கொள்ள ஆங்கிலந்தான் இப்பொழுதுள்ள நிலையில் சிறந்த ஒரே துணையாகும். இந்தித் துணை மட்டும் பெற்றிருந்தால் வடநாட்டுத் தொடர்பு மட்டுந்தான் பெறலாம், மற்ற உலக நாடுகளின் தொடர்பு, உலக அறிவியலின் தொடர்பு ஆகியவற்றைப் பெறமுடியாது. ஆங்கிலத் துணையினால் கிடைக்கும் அவ்வளவு உதவிகளையும் இந்தித் துணையினால் பெறமுடியாது; ஆனால் இந்தித் துணையினால் எதிர்பார்க்கப்படும் அவ்வளவு உதவிகளையும் ஆங்கிலத் துணையினால் பெறமுடியும். எனவேதான் இரண்டு துணைகளில் ஆங்கிலத் துணைதான் சாலச் சிறந்தது என்கிறோம். இந்தி வந்தாலும் வராவிட்டாலும் தமிழகம் ஆங்கிலத்தின் துணையை நாடியே தீரவேண்டும்; பிற திராவிடப் பகுதிகளும் அதனை நாடியே தீரவேண்டும்; இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள வடநாட்டுப் பகுதியும் அதன் துணையைப் பெற்றே தீரவேண்டும்; உலகநாடுகளும் ஒன்றோடொன்று தொடர்புகொள்ள அதன் உதவியை நாடியே தீரவேண்டும். எல்லா நாடுகளும் கற்றுத் தீரவேண்டிய நிலையிலிருக்கும் ஆங்கிலத்தையே எல்லா நாடுகளோடும் தொடர்புகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாமே! தமிழகத்தின் உள்நாட்டுத் தொடர்புக்குத் தமிழும், தமிழகத்தின அப்பாற்பட்ட திராவிடநாட்டுத் தொடர்பு—இந்தியத் துணைக்கண்டத் தொடர்பு—ஆசியாக் கண்டத் தொடர்பு—அகில உலகத் தொடர்பு

ஆகியவற்றிற்கு ஆங்கிலமும் நமக்குப் போதுமே! இந்தி எந்தவகையிலும் தேவைப்படாதே!

ஆங்கிலம் அந்நியமொழி என்றால், ஆங்கிலம் எந்த அளவுக்குத் திராவிடப் பகுதிகளுக்கு அந்நியமொழியோ அதே அளவு அந்நிய மொழிதான் இந்தியும்.

இந்தி இந்தியாவின் தேசியமொழி, ஆகவே அது கற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. தமிழகத்திற்கு ஆங்கிலம் எப்படித் தேசிய மொழி ஆகாதோ, சீனம் எப்படித் தேசியமொழி ஆகாதோ, உருது எப்படித் தேசியமொழி ஆகாதோ அப்படித்தான் இந்தியும் தேசியமொழி ஆகாது. இந்தி வட்டாரமொழியாகப் பேசப்படும் இடத்திற்குத் தேசிய மொழியாகலாமே ஒழிய பிற இடத்திற்கு அது ஒருக்காலும் தேசியமொழியாகாது. எனவே தேசியமொழி என்ற காரணம் காட்டி இந்தியைத் திராவிடத்தில் புகுத்த முயலுவது முறையாகாது.

உலகப் பொதுமொழியாக விளங்கும் ஆங்கிலமே இந்தியாவின் பொதுமொழியாக இருக்கலாம்; அவசியமான காலம் வரையில் (இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சி ஒரே ஆட்சியாக இருக்கும் வரையில்) ஆங்கிலமே இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் மொழியாக இருக்கலாம். இந்த இரண்டு வகைக்குங்கூட இந்தி தேவையில்லை.

ஆகவே திராவிடத்தில் இந்தி ஆதிக்கம் ஒழிக்கப்படவேண்டும், அதன் நுழைவு எதிர்க்கப்படவேண்டும் என்ற கருத்தைப் பரப்பி, அதற்கான பொதுமக்களின் ஆற்றல் படையையும் அறிவுப் படையையும் திரட்டும் பெரும் பணியில் திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறது.

தமிழகத்தில் இந்தி நுழைவதானது தமிழார்வம்கொண்ட எல்லாக் கட்சியினர்க்கும் நாளுக்குநாள் அருவருப்பைத் தருகிறது என்பது மகிழ்ச்சியூட்டும் நிலையாகும். தமிழார்வம்கொண்ட எல்லோருடைய ஒத்துழைப்பும் போதுமான அளவுக்குக் கிட்டினால்தான், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நல்ல முறையில் வெற்றிபயக்கும். அந்த நிலையை எதிர்பார்த்து, அந்த நிலை ஏற்படும் என்ற நம்பிக்கையுடன்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கான ஆக்க வேலைகளில் ஈடுபட்டுவருகிறது.

பெரியார் அவர்களின் ஆகஸ்ட்டுப் போராட்டம் அப்படிப்பட்ட ஒரு பொதுவான சூழ்நிலையை உருவாக்கித்தரும் என்ற நம்பிக்கையுடன் நாம் ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம். ஆனால் அந்த நம்பிக்கைக்கு இடமில்லாமல்போய்விட்டது. கொடி கொளுத்தும் போராட்டமுறை பெரும்பாலான பொதுமக்களின் ஆதரவையும் அன்பையும், இந்தியை உள்ளபடியே எதிர்க்கவேண்டும் என்று எண்ணுகிற காங்கிரசுக்காரர்களின் ஒத்துழைப்பையும் ஈட்டித்தரக்கூடிய முறையாக இல்லை. எனவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அந்த முறை தனக்கு உடன்பாடாகவில்லை என்ற கருத்துடன் ஒதுங்கி நின்று, எல்லாச் சக்திகளும் ஒன்று திரளக்கூடிய நல்ல சூழ்நிலையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

நாம் துவக்கும் போராட்டம் கூடுமானவரையில் பொதுமக்களின் எதிர்ப்புக்கு ஆளாகாமல், பொதுமக்களின் பரிவைப் பெறுகிற அளவுக்கு அமையவேண்டும். அரசாங்கத்தின் அடக்குமுறைகளும் எதிர்ப்புகளும் எவ்வளவுவந்தாலும் அவை போராட்டத்திற்கு வலிவூட்டிப் பொதுமக்களின் பரிவை நம்பக்கம் இழுத்து நிறுத்தும். ஆனால் அரசாங்கத்தின் எதிர்ப்போடு கூடப் பொதுமக்களின எதிர்ப்பையும் திரட்டுகிற அளவில் போராட்டம் அமையுமேயானால், போராட்டத்தின் நோக்கம் எளிதில் நிறைவேறாமல் போய்விடக்கூடும். ஆகவேதான் பொதுமக்களின் எதிர்ப்புக்கு இடமில்லாமல், அரசாங்கத்தோடு மட்டும் போரிடுகிற மாதிரியில் போராட்ட முறை வகுப்பதற்கான வழிவகைகளைத் திராவிட முன்னேற்றக்கழகம் தேடிக்கொண்டும், எதிர்பார்த்துக்கொண்டுமிருக்கிறது.

இந்திய அரசாங்கத்தைச் சார்ந்தோரின் பேச்சுக்களையும், எழுத்துக்களையும் துருவித் துருவிப் பர்த்தால், “**தென்னாட்டில் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்தமாட்டோம்**” **என்று** சொல்லளவிலும், “**மெல்ல மெல்ல எல்லாத்துறைகளிலும் இந்தியை ஆதிக்கம் செலுத்த விடுவோம்**” **என்று** செயலளவிலும் அவர்கள் நிற்பதைக் காணலாம். “**இந்தியைக் கட்டாயமாகப் புகுத்தமாட்டோம்**” என்று, சொல்லளவில் இந்திய அரசாங்கத்தார் இனிப் புதிதாகச் சொல்லவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கத் தேவையில்லை. ஏனெனில் பாபு இராசேந்திரபிரசாத், பண்டித நேரு, கட்சு கேசுக்கர், பந்த், டி. டி. கிருட்டினமாச்சாரி முதலியோர் “**இந்தியைத் தென்னாட்டில் திணிக்கமாட்டோம்**” என்றுதான் சொல்லிவருகிறார்கள். மற்றுமொருதடவை அப்படிச் சொல்லவேண்டும் என்று எதிர்பார்ப்பதிலோ, அப்படிச்

கருத்துக் கதிர்

ராவிட மொழி இலக்கியங்கள்

இதுகாறும் திராவிடமொழி இலக்கியங்களைப் புறக்கணித்துவிட்டு, வடமொழி இலக்கியங்களிலேயே கவனம் செலுத்தியும் அவற்றைப் பாராட்டியும் வந்த மேலைநாட்டார், இப்பொழுது திராவிட மொழி இலக்கியங்களை அறியவும் அவற்றைப் பரப்பவும் முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகியமொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க என்று, அமெரிக்க நிறுவனம் ஒன்று ஏராளமான அளவு நிதி ஒதுக்கியிருக்கிறது. அமெரிக்க—ஐரோப்பிய மக்களுக்கு இத்தகைய இலக்கியங்களில் ஆர்வம் மிகுந்திருப்பதால் மொழிபெயர்ப்பில் ஊக்கம் காட்டப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்த வேலையில் ஒத்துழைப்பு தரும்படி தென்னாட்டுப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை அந்த அமெரிக்க நிறுவனம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

❖ ❖ ❖

நால்வர் மாநாடு

உலக அரசியல் அரங்கில் நிலவும் போர் அச்சத்தை நீக்கவும், பகைமை யுணர்ச்சியைப் போக்கவும், நட்புறவை வளர்த்துக்கொள்ளவும், உலக அமைதிக்குக் கூட்டு முறையில் செயலாற்றவும், உலக வல்லரசுத் தலைவர்கள் நால்வரும் ஜெனிவாவில் நல்ல முறையில்கூடி, நல்ல முறையில் பேச்சுக்கள் நடத்தி, நல்ல முறையில் கலைந்திருப்பது போற்றிப் பாராட்டி மகிழத்தக்கதாகும்.

உருசிய முதல்வர் புல்கானினும், அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ஐசனேவரும், பிரெஞ்சு முதல்வர் பாவ்ரேயும், பிரிட்டன் முதல்வர் ஈடனும் ஆகிய நான்கு முக்கிய உலகவல்லரசுகளின் தலைவர்கள் ஒன்றுகூடி ஒரு உடன்படிக்கைக்கு வந்திருப்பது, உலக அரசியல் அரங்கில் புதுப்பொலிவும், புது நம்பிக்கையும் பிறக்க வழிசெய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

எப்படிப்பட்ட நல்ல சூழ்நிலையில் நால்வரும் கலைந்தார்களோ, அதேபோன்ற நல்ல சூழ்நிலையில் மீண்டும் கூடுவதற்கான முறையில் நால்வரும் இனிச் செயலாற்றிச் செல்லவேண்டும் என்று உலக அமைதியில் நாட்டம் செலுத்துவோர் அனைவரும் எதிர்பார்ப்பது இயற்கையே.

எவ்வளவோ உலக வல்லரசு மாநாடுகள் நாடகம்போல் கூடிக் கலைந்தன என்று பிறபாடு பெயர்பெற்றிருக்கின்றன; அப்படிப்பட்ட நிலை இந்த நால்வர் மாநாட்டுக்கு ஏற்படக்கூடாது என்பதுதான் நமது ஆவல்.

❖ ❖ ❖

திரு. வி. க. படத்திற்குத் தடையா?

சென்னை அரசியலார் காலஞ்சென்ற தமிழ்ப் பெரியார் திரு வி. க. அவர்களின் உருவப் படத்தைத் திருச்சி மாவட்டப் பள்ளி ஒன்றில்

சொல்லவைப்பதிலோ பொருளில்லை. இந்திய அரசாங்கத்தார் "என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டுக் கொடுக்கும் முறையை விட்டுவிட்டுத், தாங்களே தங்களுக்கு விருப்பமான வற்றைப் பரிமாறிவிட்டுச் "சாப்பிட வாருங்கள்!" என்ற முறையைக் கையாளத் தொடங்கிவிட்டார்கள்!

"கட்டாயமாகத் திணிக்கமாட்டோம்; ஆனால் மெல்ல மெல்ல ஊட்டுவோம்" என்ற முறையைத்தான் தென்னாட்டில் இந்தியைப் புகுத்தும் விதத்தில், இந்திய அரசாங்கத்தார் கையாண்டுவருகிறார்கள். நேரிடையாகவோ மறைமுகமாகவோ இந்தி புகுத்தப்படமாட்டாது என்பதைத்தான் நாம் எதிர்பார்க்கவேண்டுமே ஒழிய, "கட்டாயமில்லை" என்ற சொல்லை மட்டும் எதிர்பார்த்து நின்றால் எந்தப் பயனும் அதனால் விளையாது.

"இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம், நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே, அற்பமென்போம் அந்த இந்திதனை, அதன் ஆதிக்கந் தன்னைக் குலைத்திடுவோம்" என்று, தமிழார்வம் உடைய அனைவரும் ஒன்றுதிரண்டு, ஒரு முடிவு எடுத்து, தமிழ்நாட்டார் அனைவரையும் கூவி அழைப்போமாக! தமிழர்களின் செயல் ஆந்திரர்—கருநாடகர்—மலையாளிகள் ஆகியோர்க்கு எடுத்துக்காட்டாக விளங்கட்டுமாக!

திறக்கச்செய்யப்பட்ட முயற்சியைத் தடுத்திருப்பதோடு, மேலும் எந்த மாவட்டப் பள்ளியிலும் அவர் படத்தைத் திறந்துவைக்கக் கூடாது என்று கட்டளை பிறப்பித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இது உண்மைதான் என்றால். தமிழார்வங்கொண்ட அனைவர்க்கும் இது மிக்க வேதனை தரக்கூடிய செயலாகும்.

சென்னை முதலமைச்சர் தோழர் காமராசரும், பிற அமைச்சர்களும், அண்மையில்தான், திரு. வி. க. பெயரில் அமைந்த பள்ளி ஒன்றின் திறப்புவிழாவில், திரு வி. க. அவர்களைப் பற்றி மனமார வாயாரப் பாராட்டிப் பேசியுள்ளார்கள். ஒருசிலரைத்தவிர யார்யாரோ கவைக்குதவாதவர்களின் படங்களையெல்லாம் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் திறந்து வைக்கும்போது, தமிழ்ப் பெரும்புலவர் திரு வி. க. அவர்களின் படத்துக்கா பள்ளியில் இடமில்லை? பள்ளியில் திரு. வி. க. படத்துக்கு இடமில்லை என்பது தமிழர்களுக்கு வெட்கமும், வேதனையும் தரக்கூடிய செய்தியாகும். இந்த வெட்கத்தையும் வேதனையையும் துடைத்துத் தங்கள்மீது படிந்துள்ள மாசினைப் போக்கக்கூடிய மாதிரியில் சென்னை அரசியலார் விரைவில் நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்!

வங்கம் வழிகாட்டுகிறது

பாக்கித்தான் பேரரசு கிழக்கு வங்கத்தில் உருதுவைக் கட்டாயமொழியாகப் புகுத்தியதை எதிர்த்துச், சென்ற சில ஆண்டுகளாகக் கிழக்குவங்கத்தில் வங்காளிகள் தீவிரமாகச் செய்துவந்த எதிர்ப்புக் கிளர்ச்சி இப்பொழுது வெற்றிபெற்றுவிட்டது. இனி வங்காளியும் உருதுவோடு அங்கு ஆட்சி மொழியாக இருக்கும் என்றும், உருதுவைக் கட்டாயமாகப் படிக்கவேண்டிய அவசியமில்லை என்றும், ஆனால் வங்காளத்தை எல்லோரும் கிழக்கு வங்கத்தில் கட்டாயமாகப் பயிலவேண்டும் என்றும் பாக்கித்தான் பேரரசு அறிவித்துவிட்டது. உருதுமொழி ஆதிக்கம் கிழக்கு வங்கத்தில் குலைக்கப்பட்டுவிட்டது; வங்காள மொழி ஆட்சி ஏற்பட்டுவிட்டது.

கிழக்கு வங்கம் காட்டும் இந்த வழி, இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளும் பின்பற்றுவதற்கு எடுத்துக்காட்டாக இனி இருக்கக்கூடும். விரைவில் மேற்கு வங்கத்தில் இந்தி மொழி ஆதிக்கம் குலைக்கப்பட்டு, வங்கமொழி ஆட்சி ஏற்படுத்தப்படுமேயானால், நாம் வியப்படைவதற்கில்லை. அதுபோலவே தென்னாட்டிலும் இந்திமொழி ஆதிக்கம் குலைக்கப்பட்டு, திராவிடமொழிகளின் ஆட்சி அந்தந்த பகுதியில் ஏற்படுவதற்கான சூழ்நிலை விரைவில் உருவாகியே தீரும்! அந்தச் சூழ்நிலையை எதிர்பார்த்திருப்போமாக!

கோவாப் போராட்டம்

கோவாவிலிருந்து போர்த்துகீசிய வல்லரசு ஆதிக்கத்தை அடியோடு அகற்றுவதற்காகத் துவக்கப்பட்ட போராட்டம் நாளுக்குநாள் வலிவடைந்து வருகிறது. யானைபோன்ற பெரும் பெரும் வல்லரசுகளெல்லாம் ஆங்காங்கு வீழ்ச்சியுற்றுவரும் இதுநாளில், பூனைபோன்ற போர்த்துகீசிய வல்லரசு கோவாவில் ஆதிக்கம் செலுத்தத் துடியாய்த் துடிப்பது கேலிச்சிரிப்பை மூட்டுகிறது. இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் சரி, எல்லாப் பொதுமக்களும் சரி போர்த்துகீசிய ஆதிக்கம் இந்தியாவைவிட்டு அடியோடு அகலவேண்டும் என்பதிலே கிஞ்சிற்றும் வேறுபாடுகொள்ளாமல், ஒருமுகமாக இணைந்துநின்று அந்தக் கருத்தை வலியுறுத்துகின்றன. கோவாவை விடுவிக்க இந்தியப் பேரரசு எல்லா முறையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டியதைத்தவிர வேறு வழியில்லை. அதற்கான முயற்சிகளில் இந்தியப் பேரரசு ஈடுபடுமாக!

உலக மக்கள் தொகை

உலக மக்களின் தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே போகிறது. இது எங்கே போய் நிற்கும் என்பது தெரியவில்லை. மக்கள் தொகை வளரும் அளவுக்கு மக்களுக்குத் தேவையான உணவு—உடை—உறையுள் போன்ற வசதிகளும் பெருகவேண்டும். ஆனால் உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்தால், மக்கள் பெருகும் அளவுக்கு வசதிகள் பெருகவில்லை. மக்களுக்கு ஏற்படும் அழிவைவிட வசதிகளுக்கு ஏற்படும் அழிவும், கேடும் மிகவாக இருக்கின்றன. கிடைக்கும் வசதிகளை வைத்துக்கொண்டு உலக மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமானால், கருத்தடை முறை பெரும் அளவில் உலகு எங்கணும் பரவினால்தான் இயலும். 1954-ஆம் ஆண்டு கணக்குப்படி உலக மக்கள் தொகை 252,80,00,000 ஆகும்.

எழுச்சியுற்ற கோவா

அடிமைப்பட்ட நாடுகள், ஆதிக்கம்கொண்ட டுகளின் இருப்புப் பிடியினின்றும் விடு ட்டு, வீறுகொண்டு எழும்போதெல்லாம், வற்றின் வரலாறுகள் பெரும்பாலும் குருதி னால் எழுதப்பட்டவைகளாகவே இருக்கும்!

நாட்டை மீட்கும் பெரும்பணியிலே ஈடுபடும் ரர்கள் தங்களில் பெரும்பாலோரின் எலும் களையும் தசைகளையும் பரப்பி, அவர்களின் ருதியாலே மெழுகி வழி அமைத்த பிறகே, தில் நடந்து சென்று விடுதலைபுரியை டைந்திருக்கின்றனர்! நாட்டுப் பற்றுடைய ரர்கள் பலரின் உயிர்கள் விலையாகக்கொடுக் ப்பட்ட பிறகே, உலகின் பல அடிமை நாடு ளுக்கு, விடுதலை என்னும் உயர்ந்த பொருள் ட்டியிருக்கிறது!

வல்லரசுகள் தாம் அடிமைகொண்ட நாடு ளின்மீது முடிந்தவரையில் ஆதிக்கம் சலுத்த முயலுவதும், அடிமை நாடுகள், ாம் விடுதலையடைய, வல்லரசுகளை எதிர்த்து யாமல் போராடிப் பார்ப்பதும் ஆன நிகழ்ச்சி ள், இன்றைய உலக அரசியல் அரங்கில் க்கியமான நிகழ்ச்சிகளாக இருந்துவருகின் ன. வல்லரசுகள் வீழ்ச்சியுறுவதும், அடிமை ாடுகள் எழுச்சியுறுவதும் ஆன களிப்பூட்டும் கழ்ச்சிகள் இப்பொழுது ஆங்காங்கு நடை பெற்றுவருகின்றன. வல்லரசை எதிர்த்துப் பாரிடும் விடுதலைப் போராட்டக் கிளர்ச்சி ளிலே ஒன்றுதான் கோவா விடுதலைக் கிளர்ச் யாகும்.

போர்த்துகீசியரின் வல்லரசு ஆதிக்கத்தை திர்த்துக் கோவா மக்கள் இதற்குமுன் பல டவைகளில், பல வகைகளில் போராடிவந் திருக்கின்றனர். ஆனால் போர்த்துகீசியர் காவா மக்களுக்கு நீதி வழங்க மறுத்துத், தால்லைகள் பல கொடுத்துக், கோவாவில் காடுங்கோன்மை ஆட்சி நடத்திவருகின்ற ர்.

பிரித்தானியர்களை எதிர்த்து இந்தியாவில் விடுதலைப் போராட்டக் கிளர்ச்சிகள் துவங்குவ ற்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பு தாட்டே போர்த்துகீசியரை எதிர்த்துக் கோவா மக்கள் போர்தொடுத்திருக்கின்றனர். கி. பி. 1555-ஆம் ஆண்டிலிருந்தே போர்த்துகீசியரை ஏதோ ஒரு வழியில் எதிர்க்கும் மனப்பான்மை, கோவா மண்ணில் வேரூன்றிவிட்டது என்று சொல்லலாம். கோவா மக்கள் போர்த்துகீசிய அரசுக்குப் பலதடவைகள் வரிகள் செலுத்த மறுத்திருக்கின்றனர். கோவா மக்களின் மதக்கருத்துக்களுக்குப் புறம்பாகப், போர்த்துகீசியர் தங்களது கிருத்தவமதக் கருத்துக்களை வலுக்கட்டாயமாகப் புகுத்தும்போது, கோவா மக்கள் கிளர்ச்சிகள் பல நடத்தியிருக்கின்றனர். போர்த்துகீசு அரசாங்கம் கிளர்ச்சிகளில் ஈடுபட்டவர்களின் நிலங்களைப் பறிமுதல் செய்துகொண்டும், கோயில்களையும்—மசூதிகளையும் இடித்தும்—எரித்தும், மத முக்கியத்துவம் கொண்ட இடங்களை அழித்தும் பல கொடுமைகள் இழைத்திருக்கின்றது.

வேற்றூரின் ஆதிக்கத்தினின்றும் கோவாவை விடுவிக்கவேண்டி, பாட்ரசு பின்டோசு (Padres Pintos) என்பவர், 1787-இல் விடுதலைக் கிளர்ச்சி ஒன்றைத் துவக்கி அதற்குத் தலைமைதாங்கி நடத்தினார். போர்த்துகீசிய அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதித்திட்டம் நடைபெறுவதாக, அந்தோனியோ பெர்னண்டோ லோபோ என்ற பாதிரியார் போர்த்துகீசிய அரசினர்க்கு அறிவிப்புச்செய்து, விடுதலைக் கிளர்ச்சியினரைக் காட்டிக்கொடுத்தார். அதற்காக அவருக்கு உயர்ந்ததொரு பதவி பரிசாக அளிக்கப்பட்டதாம். கோவாவில் சிலகாலம் தங்கியிருந்து கோவா மக்களின் வரலாற்றை நன்கு அறிந்துகொண்ட குன்க ரீவாரா (Cunha Rivara) என்ற போர்த்துகீசிய ஆசிரியர், தாம் எழுதிய நூல் ஒன்றில் 1787-ஆம் ஆண்டில் நடைபெற்ற விடுதலைக் கிளர்ச்சி பற்றிய குறிப்புகளைக் குறித்திருக்கிறார். அந்த நூலில், விடுதலைக் கிளர்ச்சிக்காரர்கள் குதிரை வாலில் கட்டிவிடப்பட்டு ஊர்முழுவதும் இழுத்தடிக்கப்பட்டார்கள் என்றும், அவர்களின் கைகள் தனியே துண்டிக்கப்பட்டன என்றும், அவர்கள் இறக்கடிக்கப்பட்டவுடன் அவர்களின் தலைகள் கொய்யப்பட்டு நடுத்தெருக்

களில் கம்பங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டன என்றும், அதுபோலவே அவர்களின் உடல்களும் பகுதி பகுதியாகச் செதுக்கப்பட்டுக் கட்டித் தொங்கவிடப்பட்டன என்றும் அவர் எழுதிவைத்துள்ளார். இத்தகைய கொடுமைகளின் காரணமாகக் கிளர்ச்சி எங்கு பார்த்தாலும் எதிரொலிக்கச் செய்ததோடு, கோவா மக்கள் அவ்வப்போது எழுச்சியுற்றுக் கிளம்புவதற்கு அக்கொடுமைகள் காரணமாகவும் இருந்தன. 1782-க்கும் 1912-க்கும் இடையிலுள்ள சுமார் 130 ஆண்டு காலம், கோவாவின் வீரமக்களுக்குப், பாடரசு பின்டோசு கிளர்ச்சி மிகவும் உணர்ச்சியூட்டும் ஒன்றாகவே இருந்துவந்தது.

1782-க்கும் 1822-க்கும் இடையில் இராணேக்கள் என்று சொல்லப்படும் கோவா பண்டிதர்கள் விடுதலைக் கிளர்ச்சிகளை அவ்வப்போது நடத்திவந்தனர். 1822-இல் கசுடோபா (Custoba) என்பான் விடுதலைக் கிளர்ச்சியை மிக மும்முரமாக்கினான். அவனைக் கைது செய்ய போர்த்துகீசிய அரசாங்கம் எவ்வளவோ முயன்று பார்த்தது. அதனால் முடியவில்லை. அவனது தலையைக் கொண்டுவருவார்க்குப் பல ஆயிர பொன்காசுகளைப் பரிசாக அளிப்பதாக அறிவிப்பு செய்தது. அவனது விருப்பத்திற்காளான தேவதாசி ஒருத்திக்கு ஏராளமான பரிசுகளைக்கொடுத்து, அவள் மூலம் அவனைப் போர்த்துகீசிய அரசாங்கம் பிடித்தது; பிறகு அவன் ஆப்பிரிக்கா கண்டத்திற்கு நாடுகடத்தப்பட்டான்.

1834-ஆம் ஆண்டில் பெர்னார்டோ பெரிசு டா சில்வா (Bernardo Peres da Silva) என்ற கோவாவைச் சேர்ந்தவர் கவர்னராக்கப்பட்டார். இது போர்த்துகீசிய வெள்ளையர்க்குப் பிடிக்கவில்லை. அவரை வேலையினின்றும் நீக்குவதற்கு எல்லாவகைச் சூழ்ச்சிகளையும் செய்து, அதில் வெற்றிபெற்றனர். அவர் கோவாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட விடுதலை வீரர்களையும், தார்வார், பூனா, பம்பாய் முதலிய இடங்களிலிருந்து சிலரையும் கொண்ட படை ஒன்றை அமைத்துக்கொண்டு, கோவாவைப் போர்த்துகீசியரிடமிருந்து விடுவிக்க முயன்றார். அவர் நாட்டு மக்களைப் பார்த்துக் கூறும்போது, "கோவாவைச் சேர்ந்த நாம், நமக்குள் ஒற்றுமை ஏற்படுத்திக்கொள்ளாமல் எப்படி விடுதலையைப் பெறமுடியும்? இந்துக்களின் நாட்டைப் பார்மின்; தனக்குள் பிளவுபட்டுப் போரிட்டுக்கொள்ளும் ஒரு வீட்டைப்போல் காட்சியளிப்பதைப் பார்மின்! நாம் வெட்கித் தலைகுனியும்படி, ஆதிக்கம் செலுத்தும் அன்னியரின் ஆட்சியை ஆகற்றுவதற்கு ஆற்றல் வலிவற்ற தன்மையில் நாடு காட்சியளிப்பதைப் பார்மின்!" என்று அந்த நாட்களிலேயே உருக்கமாகக் கூறியுள்ளார். அவரது விடுதலைக்கிளர்ச்சி போர்த்துகீசியரால் அடியோடு அடக்கப்பட்டு அழிக்கப்பட்டதோடு அவரும் நாடுகடத்தப்பட்டார்.

செர்மியாசு மாசுகரனைசு (Jeremias Mascarenhas) என்ற கோவாவைச் சேர்ந்த கத்தோலிக்கப் பாதிரியார், போர்த்துகீசிய பாராளுமன்றத்தில், கோவாவுக்கு விடுதலை வழங்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி 1852-ஆம் ஆண்டில் வாதிட்டார்.

1896—1912-க்கு இடையில் டாடா ராணே (Dada Rane) எசுவாந்தே ராணே (Esvonta Row Rane) ஆகிய இருவரும் விடுதலைக் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்திவந்தனர்.

பிரித்தானியரை வெளியேற்ற இந்தியத் துணைக்கண்டத்தில் கிளர்ச்சிகளும் போராட்டங்களும் வலுப்பெற்றபோதெல்லாம், போர்த்துகீசியரை விரட்டவேண்டும் என்ற உணர்ச்சி கோவா மக்களுக்கும் ஏற்பட்டுவந்தது. வலுவு மிக்க பிரித்தானியர் ஒரு பரந்த இந்தியத் துணைக்கண்டத்தை விட்டு வெளியேறியதைப் பார்த்துக்கொண்டிருந்த பிறகும் வலுவிலே மிகக்குறைந்த போர்த்துகீசியர் ஒரு சிறு கோவா—டையு—டாமனை விட்டு வெளியேற மறுப்பது வியப்புக்குரியதாகவே இருந்துவருகிறது.

கோவாவில் போர்த்துகீசியரின் ஆதிக்கத்தை ஒழித்துவிட்டு, அதனை இந்தியாவோடு இணைக்கவேண்டும் என்று இப்பொழுது மூண்டெழுந்துள்ள கிளர்ச்சி வெற்றி பயப்பதற்கான அறிகுறிகளைக் கொண்டிருக்கிறது, கோவாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும், இந்தியாவிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் கோவாவை விடுவிக்கும் போராட்டத்தில் மிக மும்முரமாக அக்கறை காட்டிவருகின்றன. போர்த்துகீசிய ஆதிக்கம் ஆட்டங்கண்டுவிட்டது. விரைவில் அந்த ஆதிக்கம் விழும்; கோவா வீறுகொண்டு எழும்! என்பதற்கான அறிகுறிகள் தோன்றி விட்டன. வெல்க, வாழ்க எழுச்சியுற்ற கோவா!

காவலன்-ஒரு கைதி!

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பட்டினியின் ஊர்வலம்! பதினாயிரத்துக்கு
மேற்பட்ட தாய்மார்கள்! பாரிஸ் நகரம்
இதற்குமுன் கண்டிராத காட்சி! ஒவ்வொரு
தெருவிலும் தொகை கூடிக்கொண்டே வந்
து. அதிலும் பெண்கள். கூச்சலும் பேச்சும்
அதிகமாகிக்கொண்டே வந்தன!

ஊர்வலம் வருவது தெரிந்ததும், ரொட்டிக்
கடைக்காரர்கள் கடைகளை மூடி ஓடி ஒளிந்த
ர். ஓரிரண்டு கடைகள் உடைத்துத் திறக்
கப்பட்டன. கடைகளில் ஒன்றும் இல்லை!

"அதோ! ஒரு ரொட்டிக்கடைக்காரன்!"
ஊர்வலம் திடீரென்று பாய்ந்துபோய் அந்த
ரொட்டிக்கடைக்காரனைப் பிடித்துக்கொண்
து. அவனது கடையில் இருக்கும் தராசும்
மோசமானது, படிக்கற்களும் குறைந்த அள
வுடையவைகளாக இருந்தன. இதுவரை
வாடிக்கைக்காரர்களை, மிரட்டி, உருட்டி அவன்
வியாபாரம் செய்துவந்தான். அவன் செய்யும்
அநியாயத்தை வேறு வழியின்றி பொறுத்
துக்கொண்டிருந்தனர். இன்று அகப்பட்டுக்
கொண்டான்!

"கோணல் தராசு!" ஒருத்தி அவன் முகத்
தருகே சத்தமிட்டாள்.

"குறைந்த படிக்கல்!" இன்னொருத்தி
கூவினாள்.

"இவ்வளவு நாளும் எங்கள் வயிற்றிலடிச்சு
தானே, இந்தத் தொப்பி, வெல்வெட் கோட்
டெல்லாம் கிடைத்தன!" அவன் தலையிலிருந்த
தொப்பி, காற்றில் பறந்தது, சகதியில் விழுந்
தது. ஒருத்தி மிகுந்த கோபத்துடன் அதை
மிதித்துத்துவைத்தாள் வெல்வெட் கோட்
கிழிந்து தொங்கியது. மிகப் பரிதாபத்துடன்
ரொட்டிக்கடைக்காரன் சுற்றிலும் பார்த்தான்,
ஆயிரக்கணக்கான தாய்மார்களின் கோபப்
பார்வை அவனை மிரட்டியது.

"நேற்று குழந்தையைத் தூக்கிக்கொண்டு
போய், இவன் கடையில் ஒரு ரொட்டித்
துண்டு கேட்டேன். எனக்காக இல்லை, குழந்
தைக்காக. இந்த மனுசன் எப்படி எரிந்து
விழுந்தான் தெரியுமா? குழந்தையாவது குட்
டியாவது, போய்த்தொலை! ரொட்டி கிடை
யாது' என்று ஆளைவிட்டு விரட்டச் சொன்
னான்."

"நான் அப்படிச் செய்யவில்லையே, வேறு
யாரோ..." ரொட்டிக்காரன் சொல்லி முடிப்ப
தற்குள் மற்றொருத்தி ஆரம்பித்தாள்-

"இவன் ஒருபடி அளந்தால், அரைப்படி
கோதுமைதான் நமது பையில் விழும்.
இரண்டு ரொட்டி நிறுத்தால், ஒன்றரை
ரொட்டி அளவுதான் கிடைக்கும்!"

"கிடையவே கிடையாது! எனது கடைப்
படிக்கற்களெல்லாம் ரொம்ப சரியானவை!"
கடைக்காரன் வாதிட்டான்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஒருத்தி
ஓடிவந்தாள். "சரிதான், நிறுத்து! உன்
கடைப் படிக்கல்லுதான், இதோ பார்!"
இதற்குள் அவன் கடை சூறையாடப்பட்டு
விட்டது. மோசமான படிக்கற்களை மற்றவர்
களுக்குக் காட்ட அவள் எடுத்துவந்தாள்
அருகிலிருந்தவர்கள் அவற்றை வாங்கிப்
பார்த்தார்கள் படிக்கற்கள் இரண்டு பக்கத்தி
லும் தேய்க்கப்பட்டிருந்தன!

"இந்தப் பாதகனை என்ன செய்யலாம்!"

ஒருத்தி தேய்ந்த படிக்கல்லை வீசியெறிந்
தாள். அவன் தோளில் பட்டு விழுந்தது.
"ஐயோ!" என்று ரொட்டிக்கடைக்காரன்
உட்கார்ந்தான்.

"இப்பொழுது 'ஐயோ' என்றால் விட்டுவிடு
வோமா! அப்பொழுதெல்லாம் நாங்கள்
'ஐயோ! ஐயோ' என்று கெஞ்சி அழுதபோ
தெல்லாம் நீ சிரித்துக்கொண்டுதானே இருந்
தாய்!" ஒருத்தி எட்டி உதைத்தாள்.

"என்னை விட்டுவிடுங்கள் உங்களுக்குக்
கோடி புண்ணியம்!" பக்கத்திலிருந்தவளின்

காலைப் பிடித்துக்கொண்டு ரொட்டிக்கடைக் காரன் கெஞ்சினான்.

"பாபி! என் காலை விடு."

"பாபியா! அப்படிச் சொல்லாதேடி! இவரைப்போலப் புண்ணியவான் இல்லையென்று நமது குருமார்கள் சொல்லுகிறார்கள்! மாதா கோயிலுக்கு ஒரு மணி வாங்கித் தந்தாராம் இவர்!"

"இரு, இரு! இவனை என்னசெய்யலாம்?"

"செய்வதென்ன? இவனைத் தூக்கில் போடவேண்டும்!"

"நான் அதற்குத் தயார் செய்துவிட்டேன்" ஒருத்தி விளக்குக் கம்பத்தைச் சுட்டிக்காட்டினாள். அதில் சுருக்கிட்ட கயிறு தொங்கிக் கொண்டிருந்தது.

ரொட்டிக்காரன் அலறினான், "ஐயோ! இனிமேல் அப்படிச் செய்யமாட்டேன்! நல்ல படிக்கல் போட்டு நல்ல ரொட்டித் துண்டுகளைத் தருகிறேன்."

பெண்கள் சிரித்தனர். "இனிமேல் நாங்களும் இப்படிச் செய்யமாட்டோம்! உன்னை இப்பொழுது மட்டும் ஒருதடவை தூக்கில் போட்டுவிடுகிறோம்!"

"அந்தத் தராசை அவன் கையிலேயே கொடு! படிக்கல்லை அவன் பையில் போடு! அப்படியே அவன் தூக்கில் தொங்கட்டும்!"

"ஐயோ! ஐயோ!" ரொட்டிக்காரன் கூவினான். நான்கு பெண்கள் அவனைத் தூக்கிக் கொண்டுபோய், விளக்குக் கம்பத்தில் இருந்த கயிற்றில் மாட்டினார்கள். தூக்கில் போட வேண்டும் என்ற ஆத்திரம் இருந்ததேயொழிய, கயிற்றைக் கையால் பிடித்துக் கொண்டு ரொட்டிக்காரன் துடிப்பதைப் பார்த்ததும் அவர்களுக்கு மனம் இளகிவிட்டது. ஒருத்தி போய்க், கயிற்றை அறுத்துவிட்டாள். ரொட்டிக்காரன் கீழே இருந்த சகதியில் விழுந்தான்; சகதியை வழித்துக்கொண்டு, கழுத்தில் தொங்கிய கயிற்றுடன் அவன் ஓடினான்.

ரொட்டிக்கடைக்காரனைச் சுற்றியிருந்த தாய்மார்கள்—ஒரு நூறுபேர்தான் இருந்தார்கள். ஊர்வலத்தின் ஒருபகுதி அது. மறுபடியும் கிளம்பினார்கள். ஊர்வலம் இதற்குள் பாரிஸ் நகரத்தின் அரசாங்கக் காரியாலயத்தின் முன் போய்விட்டது.

நகரக் காரியாலயத்தின் முன் முந்நூறு இராணுவ வீரர்கள், துப்பாக்கி முனைகளை நீட்டியவண்ணம் நின்றனர். ஆனால் அவர்களைச் சுற்றிப் பதினாயிரம் தாய்மார்கள், கரண்டியை வீசிக்கொண்டும், தட்டைச் சுழற்றிக் கொண்டும், துடப்பத்தைக் காட்டிப் பயமுறுத்தியும், இராணுவ வீரர்கள் அசையாது நின்றனர்.

கற்கள் பறந்துவரத் தொடங்கின. கூட்டமும் நெருங்கிவந்தது! இராணுவ வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டும், அல்லது வழிவிட்டு விலகவேண்டும். துப்பாக்கிப்பிரயோகம் செய்தால்—ரொட்டி கேட்டு வந்தவர்கள்மீது துப்பாக்கிக்குண்டுகளைப் பாய்ச்சினால், பாரிஸ் நகரம் முழுவதும் அவர்களைச் சுற்றி வளைத்துக்கொள்ளும்! வேறு வழியின்றி இராணுவ வீரர்கள் வழிவிட்டு விலகினார்கள். பெண்கள் படை காரியாலயத்திற்குள் புகுந்தது!

காரியாலயத்தில் எல்லா இடங்களும் பெண்கள் மயமாக இருந்தன. அவர்கள் அந்தக் காரியாலயத்தின் அதிகாரியைத் தேடினார்கள், மக்களுக்கு வேண்டிய நீதியைத் தேடினார்கள். இரண்டும் கிடைக்கவில்லை. பெண்களின் கோபம் அதிகமானது. கண்டனங்கள், வாதங்கள், கனல்பறக்கும் பேச்சுகள், கடுமையான தீர்ப்புகள்—காரியாலயத்திற்குள் கொந்தளித்தன. நாற்காலிகள், மேஜைகள், கண்ணாடிகள், சாமான்கள் எல்லாம உடைபட ஆரம்பித்தன!

"அபாயம்! வெடிமருந்துச்சாலை" என்று ஒரு அறைக்கதவின்மீது அறிவிப்பு இருந்தது. பெண்களின் கவனம் அதன்மீது பாய்ந்தது, கோடாலியும், சம்மட்டியும் கதவின்மீது பாய்ந்தன. பத்து, இருபது கைகள் மாறி மாறித் தாக்கின. கதவு பிளந்து விழுந்தது. ஆரவாரத்துடன் பெண்கள் உள்புகுந்தனர். துப்பாக்கிகள், துப்பாக்கிக் குண்டுகள், சில பீரங்கிகள், வெளிவந்தன. அவற்றை வெளியேற்றிக்கொண்டனர்.

கட்டிடம் அலங்கோலமாகக்கிடந்தது. சாமான்கள் உடைந்து, கண்ணாடிகள் சிதறி, மரத்துண்டுகள் குவிந்து காணப்பட்டன. இன்னும் ஒன்றுதான் பாக்கி! கட்டிடத்துக்குத் தீ வைத்தல்! ஒரு பெண் தீப்பந்தத்தைக் 'கொளுத்திவிட்டாள். அப்பொழுது திடீரென்று "வார்செய்ல்!" என்ற குரல் வந்தது.

"ஆமாம்! வார்செய்ல்!"

“ வார்செய்லுக்குப் போவோம் !”

“ அரசனைக் கேட்போம் ரொட்டி எங்கே யென்று!”

“ பிரபுக்களைக் கேட்போம் ரொட்டி தருகிறீர்களா இல்லையா யென்று !”

“ வார்செய்லுக்கு ! வார்செய்லுக்கு !”

குரல்கள் எதிரொலித்தன. கட்டிடம் மறக்கப்பட்டது. கொளுத்தப்பட்ட தீப்பந்தம் கீழே விழுந்தது. வார்செய்லை நோக்கிப் படை புறப்பட்டது. துப்பாக்கிகளைத் தாங்கிக் கொண்டு, முதலில் சிலர் நின்றனர். அடுத்த படி பீரங்கிகளை இழுத்துக்கொண்டு இரண்டு குதிரைகள்—அந்தக் குதிரைகளும் பட்டினியால் வாடியவைகளே. பின்னால் மற்ற ஆயுதங்களைத் தாங்கிய பெண் வீரர்கள்—இரும்புக் கம்பி, கரண்டி, சம்மட்டி, கோடாலி. “வார்செய்ல்” என்று கூவி பெண்களின் கவனத்தைத்திருப்பியவன், மெய்யார்த் என்ற போர் வீரனே. அவன் பாஸ்டிலி வீழ்ச்சியின்போது மக்களுடன் சேர்ந்து, பாஸ்டிலியைத் தாக்கி வெற்றிக்கு உதவியவன். பெண்கள் அவனைப் பாராட்டி, அணிவகுப்புக்கு முன்னால் அவனை நிறுத்தினார்கள். முரசு சத்தமிட்டது, ஊது குழல்கள் அலறின. ஒரு துப்பாக்கி வெடித்தது. படை கிளம்பியது வார்செய்ல் நோக்கி—பிரெஞ்சு நாட்டு மன்னன் 16-வது லூயியினுடைய அரண்மனையை நோக்கி!

ஊர்வலம்—அதிலும் பெண்களின் ஊர்வலம். போகும் வழியில் சில இடங்களில் தடங்கலும், உள் சண்டையும், எந்தவழியாகப் போவது என்பதில் வாக்குவாதமும் ஏற்பட்டன. தலைமைவகித்த மெய்யார்த் மிகவும் சிரமத்துடன், அவற்றை அடக்கிவந்தான். இராணுவமுகாம் ஒன்றைக் கடந்து ஊர்வலம் போனது. இராணுவ முகாமென்றால், அங்கு ஏராளமான துப்பாக்கிகள், வெடிமருந்துகள், பீரங்கிகள் எல்லாம் இருக்கும். “ இந்த இராணுவ முகாமை நாம் வளைத்துப் பிடித்துக் கொண்டு, துப்பாக்கிகளை எடுத்துக்கொள்ளலாம்!” என்று ஒரு பெண் யோசனை கூறினாள். நகரக் காரியாலயத்தில் சில துப்பாக்கிகள்தான் கிடைத்தன. அவற்றைத் தாங்கிச் செல்லும் வாய்ப்பு சிலருக்குத்தான் கிடைத்தது. முப்பதினாயிரம் பெண்கள் உள்ள இடத்தில்—ஊர்வலத்தில் இப்பொழுது அதிகமானவர்கள் சேர்ந்துவிட்டனர். ஒரு முப்பது பேருக்கு மட்டுமதான், துப்பாக்கிகள். மற்றவர்களெல்லாம், கோடாலி, சம்மட்டி, இரும்புக் கரண்டி. இவைகளுடன் திருப்தியடைய வேண்டியிருந்தது. துப்பாக்கி வைத்துக் கொண்டு முதலில் செல்லும் பெண்களைப் பார்த்தால் பின்னால் இருப்புக்கரண்டியை வைத்துக்கொண்டிருக்கும் பெண்களுக்குப் பொறுமையாக இருந்தது. ஆதலால் இராணுவ முகாமைப் பிடித்தால், தங்களுக்கும் துப்பாக்கிக் கிடைக்குமென்று ஆதரித்தனர். “ இராணுவ முகாம்! இராணுவ முகாம்!” என்ற கூச்சல் வலுத்தது.

பாரிஸ் நகர அரசாங்க அலுவலகத்தைப் பிடித்ததைப்போன்று. இராணுவ முகாமைப் பிடிப்பது அவ்வளவு சுலபமானதல்ல என்பது ஊர்வலத்துக்குத் தலைமைவகித்த மெய்யார்த்துக்குத் தெரியும். அவனும் ஒரு போர்வீரனாக—படையில் ஒரு தலைவனாக இருந்தான். துப்பாக்கிகள் வேண்டி சத்தம் போடுபவர்களிடம் இராணுவ முகாமைப் பிடிப்பது முடியாது என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆதலால் “ இந்த இராணுவ முகாமில் துப்பாக்கிகளே கிடையாது, மேலும் துப்பாக்கிகள் நமக்கு எதற்கு? துப்பாக்கிகளை எடுத்துப்போனால் வார்செயல் அரண்மனையில் இருக்கும் பிரபுக்களும், அரசனும் பயந்து ஓடி ஒளிந்துகொள்வார்கள் ! அப்புறம் அவர்களைப் பார்க்கமுடியாது !” என்று மெய்யார்த் சாமர்த்தியமாகச் சொல்லிவைத்தான். பெண்கள் சிரித்துக்கொண்டனர், அரசன் அவனுடைய பிரபுக்கள் முதலியவர்களின் கோழைத்தனத்தை நினைத்து !

ஊர்வலம் பாரிஸ் நகரைவிட்டு வெளிவந்தது. ஆரவாரம் அடங்கியது. மெய்யார்த் படையில் ஒரு தலைவனாக இருந்தவனாதலால், பெண்களையெல்லாம் பிரித்து, படையில் இருப்பதைப்போல அணிவகுத்தான். சிறு சிறு பிரிவுகள் அமைக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைவர் நியமிக்கப்பட்டது. அந்தத் தலைவரின் கட்டளைப்படி அந்தப் பிரிவு நடந்துகொள்ளவேண்டும். ஒவ்வொரு பிரிவும் மூன்று, அல்லது ஐந்துபேர் கொண்ட வரிசை வரிசையாக நின்றது. பின் இராணுவ முரசு அடிப்பதற்கொப்ப, நடைபோடவேண்டும். இவையெல்லாம் பெண்களுக்குப் புதுமையாக இருந்ததால், மிக உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டனர். இராணுவ அமைப்பைப்போலவே, ஊர்வலம் பிரிக்கப்பட்டு, படை நகர்ந்தது. முதல் வரிசையில் முரசு அடிப்பவர்கள், பின் ஊதுகுழல்கள், ஒவ்வொரு தலைவருக்கும் பின்னால் ஒரு பிரிவு இப்படிப் பெண்கள் படை சென்றது. பெண்கள் அமைப்புக்குப் பின்னால் ஆண்களும்—அவர்களில் பெரும்பாலோர் பாஸ்டிலியைத்

தாக்கிய போர்வீரர்கள் இருந்தனர்—படையமைப்புடன் சென்றனர்.

பாரிசிலிருந்து வார்செயல் அரண்மனை பன்னிரண்டு மைல் தூரம். அந்தப் பாதையில் பெண்கள் படை சென்றது. வழியில் வரும் குதிரை வண்டிகள்—கோச்சுகள் நிறுத்தப்பட்டன. அதில் இருக்கும் பிரபுக்கள், சீமாட்டிகள் இறங்கி நடக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். சீமாட்டிகள்—குளிரால், பயத்தால் நடுங்கிக்கொண்டு இறங்கினர். பட்டாடைகள், வெல்வெட் மிதியடிகள்! கீழே அடிவைத்ததும், சகதி! வெல்வெட் மிதியடி சேற்றில் அமிழ்ந்தது, பட்டாடையில் சேறு பட்டது! பட்டாடையினர் பரிதவித்தனர், பட்டினிப் பட்டாளம் சிரித்துக்கொண்டு போனார்கள்.

"பட்டினிப் பட்டாளம் வருகிறதாம்!" "பாரிஸ் நகரத் தாய்மார்கள் படையெடுத்து வருகிறார்கள்!" பரபரப்பான செய்தி வார்செயல் அரண்மனையில் பரவியது. அரசன் வேட்டைக்குச் சென்றிருந்தான், பக்கத்திலுள்ள ஒரு காட்டுக்கு. குதிரைவீரன் விரைந்துசென்று, "பட்டினிப் பட்டாளம் அரண்மனையை நோக்கி வருகிறதாம்!" என்று அறிவித்தான், மன்னன் கலக்கமடைந்து வேட்டையை விட்டு, அரண்மனைக்குத் திரும்பி வந்தான். அரண்மனையின் கதவுகள் சாத்தப்பட்டன. காவல் வீரர்கள் தயாராக்கப்பட்டனர்.

அரண்மனைக்கு அருகாமையில் இருந்த கட்டிடத்தில் தேசிய அசெம்பிளி கூடி, சட்டதிட்டங்களை வகுத்துக்கொண்டிருந்தது. மக்களெல்லோருக்கும் சம உரிமையைத் தரும் சட்டமொன்றை அந்தச் சபை நிறைவேற்றியிருந்தது. மன்னன் அதை ஒப்புக்கொள்ளவில்லை. எனவே அசெம்பிளி திரும்ப விவாதித்துக்கொண்டிருந்தது.

"பாரிஸ் நம்மீது படையெடுத்து வருகிறது!" ஒரு அங்கத்தினர் போய் சபைத் தலைவரிடம் அறிவித்தார்,

சபைத் தலைவருக்கு அந்தச் செய்தி சாதாரணமாக இருந்தது. "இருக்கலாம்!" என்று அவர் சொன்னார்.

அங்கத்தினருக்குக் கோபம் வந்தது. "நான் சொல்லுகிறேன். நம்பினால் நம்புங்கள் நம்பாவிட்டால் போங்கள். பாரிஸ் நம்மீது படையெடுத்து வருகிறதென்பது மட்டும் உண்மை. இத்துடன் சபையைக் கலைத்துவிட்டு நாம் போய்விடலாம்!"

சபைத்தலைவர் அசைவதாயில்லை. "அசெம்பிளி தொடர்ந்து நடைபெறும். பாரிஸ் படையெடுத்துவந்தால் நல்லதுதானே, சீக்கிரத்தில் பிரான்சு குடியரசு நாடாகிவிடும்" சபைத் தலைவர் வேடிக்கையாகச் சொன்னார். அவர் சொன்னது பின்பு வரலாற்று உண்மையாகியது. பாரிசிலிருந்து பட்டினிப் பட்டாளம் வருகிறதென்று அறிவிக்கப்பட்டதும், பல அங்கத்தினர்கள் சபையிலிருந்து வெளியேறி விட்டனர்.

பட்டினிப் பட்டாளம் வார்செயலுக்குப் பக்கத்திலுள்ள குன்றுக்கு வந்துவிட்டது. அந்த மேட்டு நிலத்திலிருந்து பார்த்தால், அரண்மனை, அதையடுத்து. கோட்டை, அரண்மனைத் தோட்டம், புல்வெளி, உல்லாச ஏரி, நந்தவனம், சற்று தள்ளி அசெம்பிளி கட்டிடம் முதலியவை தெரிந்தன. படைத் தலைவன் மெய்யார்த், படையின் அணி வகுப்பை மாற்றியமைத்தான். துப்பாக்கி, பீரங்கி முதலியவைகளைப் பின்பக்கம் போகச் செய்து, சிறுசிறு பிரிவுகளாக இருந்ததை மாற்றி, நீண்ட வரிசைகளில் மூன்று மூன்று பேராக நிற்கவைத்தான். "நமது குறைகளைச் சொல்லப்போகிறோம், ஆதலால் இப்படிச் சமாதானமாகப் போவதுதான் நல்லது" தலைவன் சொன்னதை மற்றவர்கள் ஒத்துக்கொண்டார்கள். பாட்டுப் பாடிக்கொண்டு—மகிழ்ச்சிகரமான பாட்டு, கோபமான பாட்டைப் பாடினால் அரண்மனையிலுள்ளவர்கள் பயந்துவிடுவார்களாம்—ஊர்வலம் நகர்ந்தது.

முன்னால் சென்ற மெய்யார்த் அரண்மனை செல்லும் வழியில் புகாமல், அசெம்பிளி இருக்கும் கட்டிடத்தை நோக்கிப் போனான். "மக்கள் பிரதிநிதிகளிடம் முதலில் முறையிடலாம். பின்பு மன்னனிடம் போகலாம்!" அவன் சொன்னதை பெண்கள் ஏற்றுக் கொண்டனர்.

மக்களெல்லோருக்கும் சம உரிமைகள் அளிக்கும் சட்டத்தைப்பற்றி அசெம்பிளி விவாதித்துக்கொண்டிருந்தது. தாங்கள் நிறைவேற்றும் தீர்மானத்தை அப்படியே ஒத்துக்கொள்ளும்படி மன்னனைக் கேட்டுக் கொள்ள ஒரு குழுவை நேரில் அனுப்புவதென அசெம்பிளி தீர்மானித்தது. அசெம்பிளி நடவடிக்கைகளில் அங்கத்தினர்கள் ஈடுபட்டிருந்தாலும், அவர்களுடைய கவனம் வெளிப்புறத்திலிருந்தது. அங்கத்தினர்கள் தமக்குள் மெதுவாகப் பேசிக்கொண்டனர், அடிக்கடி வெளியில் போய் உள்ளே வருவதுமாக இருந்தனர், தங்களது இடத்தில் அமை

யாக உட்கார்ந்திருக்க எவராலும் முடிய ல்லை.

திடீரென்று சலசலப்பு, சத்தம், ஆரவாரம்! அசெம்பிளி கட்டிடத்தைச் சுற்றிலும் பெண் ள்! அசெம்பிளி அங்கத்தினர்கள் திகைத் ப்போய் உட்கார்ந்திருந்தனர்! ஊர்வலத் க்குத் தலைமைவகித்த மெய்யார்த் பதினைந்து பண்களை மட்டும் அழைத்துக்கொண்டு ள்ளே வந்தான்.

"உங்களுக்கு என்ன வேண்டும்?" சபைத் லைவர் தனது பதவிக்கேற்ற முடுக்குடன் கட்டார்.

"ரொட்டி!" "ரொட்டி!!" "ரொட்டி!!!" தினைந்து குரல்கள் பதில் சொல்லின.

பிரெஞ்சு நாட்டின் சட்ட திட்டங்களை உரு ாக்கும் வேலையில் அந்த அசெம்பிளி ஈடுபட் ருந்தது. ஆனால் பிரெஞ்சு நாட்டின் அப் பாழுதைய முதல் தேவை ரொட்டி! அந்தத் தவைதான் எதிரே பதினைந்து தேவதை ளாக—வெளியில் முப்பதினாயிரம் தேவதை ளாகக் காட்சியளித்தது.

மெய்யார்த் தாங்கள் வந்திருக்கும் கார ாத்தை விளக்கினான். பாரிஸ் நகரில் ரொட்டி டைக்கவில்லை. பலநாள் பட்டினி! ரொட்டி ப்படித் திடீரென்று கிடைக்காமற்போயிற்று. ிரபுக்கள் சூழ்ச்சி செய்தனர். ரொட்டி, காதுமைமாவு பதுக்கப்பட்டுவிட்டன! புரட்சி சய்த பாரிஸ் நகரை பிரபுக்கள் பட்டினி பாட்டு சாகடிக்க முயல்கின்றனர். இதை அசெம்பிளி—பிரெஞ்சுநாட்டு மக்களின் நம்பிக் கைக்குப் பாத்திரமான அசெம்பிளி பார்த்துக் காண்டு சும்மா இருப்பதா?

மெய்யார்த் கூட்டங்களில் பேசிப் பழக்க ில்லாதவன். இருந்தபோதிலும் அவசியமும், முக்கியத்துவமும் வந்தபொழுது பேச்சு தானாகவே வந்தது. "பட்டினி! பட்டினி! பல ாள் பட்டினி! அத்துடன் நிற்கவில்லை. நம் மைப் பழிவாங்க நினைப்பவர்கள் வெந்த புண் ணில் வேல்கொண்டு தாக்குகின்றனர். அரச ின் படைவீரர்கள். பிரபுக்களின் கையாட் ள் நமது புரட்சி சின்னத்தை—சிகப்பும் நீல மும் கலந்த கொடியை அவமதித்தனராம், ாலடியில் போட்டுத் துவைத்தனராம். பட் டினியின் காலடியில் பாரிஸ் மக்கள்! கொடு மையாளரின் காலடியில் நமது கொடி! இவற்றை இந்த அசெம்பிளி பார்த்துக் காண்டு சும்மா இருப்பதா?"

மெய்யார்த் சொல்வதை ஆமோதித்து வெளியிலிருந்து முப்பதினாயிரம் குரல்கள் ஒலித்தன. சட்டசபைத் தலைவர், பாரிஸ் நகர மக்களின் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்ப தற்கு அரசனிடம் ஒரு குழுவை அனுப்பி வைக்கலாம் என்ற யோசனையைத் தெரிவித் தார். அதன்படி, அசெம்பிளித் தலைவர் தலை மையில் ஒரு குழு கிளம்பியது. தலைவருக்குப் பதில், துணைத்தலைவர் அசெம்பிளியை நடத் தினார். வெளியில் கூடியிருக்கும் முப்பதினா யிரம் பெண் "அங்கத்தினர்கள் கொண்ட அசெம்பிளியை" அமைதியாக இருக்கச் செய்ய மெய்யார்த் பின்னால் விடப்பட்டான்.

அரசனைக் காண, அசெம்பிளித் தலைவரும் —அவர் பெயர் மூனியர்—குழுவிலுள்ள அங் கத்தினர்களும் அசெம்பிளிக் கட்டிடத்தை விட்டு வெளிவந்தனர். வெளியில் காத்திருந்த பெண்கள் அந்தக் குழுவினரைச் சூழ்ந்து கொண்டனர். அரசனிடம் போகிறார்கள் என்று தெரிந்ததும், தாங்களும் அந்தக் குழு வில் இருக்கவேண்டுமென்று கூவினார்கள். பின், பெண்கள் பிரதிநிதிகள் பன்னிரண்டு பேர்கள் அரசனைக் காணும் குழுவில் சேர்த் துக்கொள்ளப்பட்டனர்.

மணி நான்கு. மழை பெய்ய ஆரம்பித்தது. வெளியில் கூடியிருந்த கூட்டம் மழையில் நனையத்தொடங்கியது. இரண்டிலொன்று பார்த்துவிட்டுத்தான் போவது என்ற உறுதி யுடன், அவர்கள் அசையாது இருந்தனர்.

மழையில் நனைந்துகொண்டு, அசெம்பிளித் தலைவரும், குழுவினரும்—பன்னிரண்டு பெண் கள் உட்பட—அரண்மனை வாயிலை அடைந்த னர். ஏதோ கும்பல் அரண்மனைக்குள் புக நினைக்கிறது என்ற எண்ணத்துடன, வாயில் காப்பாளர்கள் கூட்டத்தை விரட்டியடித்த னர். தலைவரும், அங்கத்தினர்களும் சேற்றி லும் சகதியிலும் வீழ்ந்தனர். பெண்கள் கவ லைப்படவில்லை. அதற்கு முன்னமே அவர்க ளுடைய உடைகள் சேற்றிலும் மழையிலும் நனைந்திருந்தன. சிதறடிக்கப்பட்ட குழுவினர் மீண்டும் ஒன்றுகூடி, தாங்கள் வந்திருக்கும் காரணத்தைத் தெரிவித்தனர். அசெம்பிளித் தலைவர் இருக்கிறார் என்று தெரிவித்ததும், குழுவினர் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

அரசனைப் பார்க்கப்போவதற்கு கூட்டம் அதிகமாயிருப்பதாகத் தலைவர் மூனியருக்குத் தோன்றியது. ஆதலால் ஏழு பெண்களை வெளியே உட்காரவைத்துவிட்டு, ஐந்து பெண்களை மட்டும் அழைத்துக்கொண்டு, அரசனைக் காணச்சென்றார்.

அசெம்பிளிக்கு வெளியில் கூடியிருந்த தாய்மார்கள் மழையில் நனைந்துகொண்டு, ஓரங்களில் ஒதுங்கிக் காத்துக்கொண்டிருந்தனர். மெய்யார்த் அவர்களுக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தான்.

கடைசியாக மன்னனைக் காணச்சென்ற பன்னிரண்டு பெண்களும் திரும்பிவந்தனர் அவர்களுடன் சென்ற மூனியரையும், மற்ற அசெம்பிளி அங்கத்தினர்களையும் காணோம். பன்னிரண்டு பெண்களும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வருவதைப் பார்த்தால், நல்ல செய்தியாகத்தான் இருக்கவேண்டும்.

என்ன செய்தி?

அவர்களில் ஐந்துபேர் அரசனைப் பார்த்தார்களாம்! அரசனை நேரில் பார்த்ததும் பேசமுடியவில்லையாம்! பேச ஆரம்பித்த ஒருத்தி மயக்கம்போட்டுவிடுவாள் போலிருந்ததாம்! உடனே அரசன் அவளை உட்கார வைத்து, தன்கையால்—ஆமாம் அரசனுடைய கையால்—தண்ணீர்கொடுத்தார்!

பாரிஸ் நகரில் உள்ள நிலைமையைப் பற்றி சொன்னதும், அரசர் மிகவும் பரிதாபப்பட்டாராம்! ரொட்டி இனி ஏராளமாகக் கிடைக்குமென்று சொன்னாராம்! இனிக் கவலைவேண்டாம் என்று அரசர் புன்னகையுடன் வழியனுப்பினாராம்!

எவ்வளவு நல்ல அரசர்! எவ்வளவு இதமாகப் பேசினார்!

அரண்மனைக்குச் சென்றுவந்த பெண்கள் அப்படிச் சொன்னார்கள்.

நல்ல செய்திதான்—ஆனால், மழையில் நனைந்து, காத்துக்கொண்டிருந்த பெண்களுக்கு கோபம் வந்தது. ரொட்டிக்கு வழியென்ன என்று இவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினால், இவர்கள் திரும்பிவந்து "அரசர் இதமாகப் பேசுகிறார்! புன்னகை செய்தார்!" என்று சொல்லுகிறார்களே போனகாரியம் என்னவாயிற்று?

"அரசர் தன்கையால் தண்ணீர்கொடுத்தாராம்! இவள் அப்படியே பூரித்துப்போய்விட்டாள்! நாம் இங்கே மழையில் நனைந்துகொண்டு உட்கார்ந்திருக்கிறோம்!"

"இதமாகப் பேசினாலென்ன, புன்னகை செய்தாலென்ன? ரொட்டிக்கு வழி செய்யாமல் ஏன் திரும்பிவந்தீர்கள்?"

"இவர்களெல்லாம் துரோகிகள்! இங்கு நமது குழந்தைகள் பசியால் துடிக்கின்றன நாம் மழையில் நடுங்கிக்கொண்டிருக்கிறோம் அரண்மனைக்குள் அடியெடுத்து வைத்ததும் அரசனைப் பார்த்ததும், மயங்கிப்போய் வெறுங்கையுடன் திரும்பிவந்துவிட்டார்கள்."

கூட்டத்தினரின் கோபம் அந்தப் பன்னிரண்டுபேர்களின்மீது பாய்ந்தது. மெய்யார்த் அவர்களைத் தடுத்தான். பன்னிரண்டு பெண்களில் ஒருத்தி முன்வந்து, "பட்டினி நிலைமையைப்பற்றி நாங்கள் சொல்லாமல் வரவில்லை. ரொட்டி ஏராளமாகக் கிடைக்கும்படி செய்வதாக அரசர் சொன்னார்" என்று அறிவித்தாள்.

முன்பெல்லாம் அரசர் சொல்லுகிறார் என்றால், மக்கள் திருப்தியடைந்துவிடுவார்கள். ஆனால் இப்பொழுது மன்னனின் சொல்லை மக்கள் நம்பத் தயாராயில்லை.

"சொன்னால் போதாது! போய், எழுத்து மூலம் வாங்கிவாருங்கள்!" என்று கூட்டத்திலிருந்தவர்கள் கட்டளையிட்டார்கள், பன்னிரண்டு பெண்களும் திரும்ப அரண்மனையை நோக்கி நடந்தார்கள்.

(தொடரும்)



குத்தாத கூர்முள்ளால் குத்து!

[எழிலி]

தலைவனும் தலைவியும் மணம் புரிந்துகொண்டு சில நாட்களே ஆகின்றன! அவர்கள் இருவரும் இல்லற இன்பத்தை இனிது நுகர்ந்துவருகின்றனர்.

அறிவிலும் ஆற்றலிலும் மேம்பாடுற்று விளங்கிவரும் தலைவன், வீரர் கூட்டம் ஒன்றிற்குத் தலைவனாய் இருந்துவருகிறான். அவன் வாழும் நாட்டின் அரசனுக்குத் தேவை ஏற்படும்போது சென்று உதவுவதும், அரசன் விரும்பித்தரும் பரிசுகளைப் பெற்றுவருவதும் தலைவனின் வேலையாகும்.

தன் நாட்டு அரசனுக்கும் வேற்றுநாட்டு அரசனுக்கும் வேற்று நாட்டிலே போர் மூளுகிறது. அரசன் படையெடுத்துக் கிளம்புகிறான். தலைவனும் தன் வீரர் கூட்டத்தை அழைத்துக்கொண்டு உடன் செல்லவேண்டியவனாகிறான். தலைவியை விட்டுப் பிரிந்து செல்ல மனமில்லாமல், வேறு வழியில்லாமல், பிரியா விடைபெற்றுச் செல்லுகிறான்.

காதலியை விட்டுப் பிரிந்து செல்லுகிறோமே என்ற வருத்தம் அவனுக்கு ஏற்படுகிறது என்றாலும், இரண்டு கடமைகளை நிறைவேற்றுகிறோமே என்று எண்ணும்போது அவனுக்கு ஏற்படும் களிப்பு, அவ் வருத்தத்தைச் சிறிது மறக்கடிக்கிறது. நாட்டிற்காகப் போரிட்டு நாட்டிற்கு வெற்றி பயக்கவேண்டும் என்பது ஒன்று; அரசன் விரும்பிக் கொடுக்கும் பரிசுகளைப் பெறவேண்டும் என்பது மற்றொன்று. போரிடுதல்-பொருளீட்டுதல் ஆகிய இரு கடமைகளையும் நிறைவேற்ற தலைவன் வெளியூருக்குப் புறப்படுகிறான்.

தன்னைவிட்டுத் தலைவன பிரிவது கண்டு தலைவி ஏங்குகிறாள் என்றாலும், தலைவன் கடமையாற்றச் செல்கிறான், அவனைத் தடுத்து நிறுத்தல் முறையாகாது என்று கருதித் தலைவி தன்னைத்தானே ஆற்றிக்கொள்கிறாள்.

தலைவன் தன் வீரர் கூட்டத்துடன், தன் அரசனுக்காகக் கோடைகாலம் முழுவதும் வெம்போர் புரிகிறான். மழைக்காலம் நெருங்குகிறது. போரோ முடிந்தபாடில்லை. முதல் மழையும் பெய்கிறது. இனிப் போரை நிறுத்திவிடவேண்டிவருமே, இப்பொழுதே முடிவு கண்டுவிட்டாலல்லவா நல்லது, என்று கருதித் தலைவன் மிகக் கடுமையாகப் போரிடுகிறான். இறுதியில் அரசனுக்கு வெற்றி பயக்கிறான். அரசனும் மகிழ்கிறான். அரசன் தலைவனுக்கு வெற்றிமாலை சூட்டுகிறான்; வெற்றிப் பரிசுகளாக ஏராளமான பொருள்களை வழங்குகிறான். தலைவன், அரசன் கொடுத்த பொருள்களையெல்லாம் பெற்றுக்கொண்டு, வெற்றிக் களிப்போடு, தன் வீரர் கூட்டத்தோடு ஊருக்குத் திரும்புகிறான்.

தலைவன் குதிரைகள் பூட்டிய தேரிலே உட்கார்ந்து செல்ல, வீரர்கள் புடைசூழ்ந்து நடக்கின்றனர். வீரர்களின் நடைக்கு ஒப்ப, தேரை மெல்ல ஓட்டிச் செல்கிறான் தேர்ப்பாகன். ஊருக்குத் திரும்புகிறோம் என்ற நினைப்புடனே, தன அருமைக் காதலியையும் காணப்போகிறோம் என்ற நினைப்பு வர, விரைவாகச் செல்லவேண்டும் என்ற எண்ணம் தலைவனுக்கு ஏற்படுகிறது. ஆனால் தேர்ப்பாகனோ தேரை மெல்ல ஓட்டிக்கொண்டு செல்கிறான். காதலியை நினைத்துக்கொண்டு, தேர் விரைவாகச் செல்லவேண்டுமே எனறு எதிர்பார்க்கிறான் தலைவன். வீரர்கள் நடந்துவருவதை நினைத்துக்கொண்டு, அவர்களது நடைக்கு ஏற்ப தேர் மெல்லச் செல்லவேண்டுமே என்று எண்ணுகிறான் தேர்ப்பாகன். தலைவன் தேர்ப்பாகனுக்குத் தன் எண்ணத்தைக் குறிப்பால் உணர்த்த ஆவலுறுகிறான்.

தலைவன் : *பாகனே! தேரை விரைவாக ஓட்டு!*

பாகன் : *தலைவ! தேரை விரைவாக ஓட்டினால் வீரர்கள் நம்மோடு சேர்ந்து அவ்வளவு விரைவாக ஓடிவரமுடியாதே!*

தலைவன் : *அவர்கள் நம்மோடு வரவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லையே!*

பாகன் : *அவர்கள் வரவேண்டும் என்று எண்ணிக்கொண்டல்லவா வருகிறார்கள்!*

தலைவன் : *அவர்கள் மெல்ல வரட்டும் இடையில் அணிந்துள்ள கச்சையைத் தளர்த்தி விட்டுக்கொண்டு, ஆங்காங்கு, அவரவர்கள் விரும்பியவண்ணம் தங்கித்தங்கி வரட்டும்! நாம் விரைவாகச் செல்வோம்! தேரை ஓட்டு!*

பாகன் : *தலைவ! அவர்களை விட்டுவிட்டு நாம் ஏன் விரைவாகப் போகவேண்டும்? அவர்களையும் அழைத்துக்கொண்டே மெல்லப் போகலாமே!*

தலைவனின் உள்ளக்கிடக்கையைப் பாகனால் அறிந்துகொள்ளமுடியவில்லை. வேறு ஏதொரு குறிப்பினாலாவது தன் உள்ளக் கிடக்கையைப் பாகனுக்கு அறிவிக்க இயலுமா என்று முயலுகிறான் தலைவன். அவன் சுற்றுமுற்றிலும் பார்க்கிறான். காட்டுச்சேவல் ஒன்றின் நடமாட்டம் அவன் கண்ணில் தென்படுகிறது. உருக்கிய கருநிறமுள்ள நெய்யில், வெள்ளிய பால்துளிகள் பட்டால் எப்படிக் காட்சியளிக்குமோ அப்படிப்பட்ட தோற்றம் அதன் கழுத்திடத்தே காணப்படுகிறது. தயிர் கடையும் போது எப்படிப்பட்ட ஒலி கிளம்புமோ அப்படிப்பட்ட ஒலி அதனிடத்தே கிளம்புகிறது. இவையெல்லாம் அவனைக் கவருகின்றன. மழை பெய்து, ஈரம் புலராத நிலத்திலிருந்து புழு பூச்சிகளைக் கிண்டி எடுத்துக்கொண்டு அந்தச் சேவல் போகும் காட்சியைக் காண்கிறான். உடனே பாகனுக்குச் சுட்டிக்காட்டிக் கூறுகிறான்.

தலைவன் : *பாக! அதோ பார்! அந்தக் காட்டுச் சேவலை!*

பாகன் : *ஆமாம்! அழகாகத்தானிருக்கிறது!*

தலைவன் : *நான் பார்க்கச் சொல்லியது அதன் அழகையல்ல, அதன் செயலை!*

பாகன் : *அது என்ன செய்கிறது?*

தலைவன் : *புழு பூச்சிகளைக் கிண்டி எடுத்துக் கொண்டு செல்வதைப் பார்!*

பாகன் : *இயற்கைதானே இது! இதிலென்ன வியப்பு இருக்கிறது?*

தலைவன் : *வியப்புக்கல்ல நான் சொல்லியது! அது எங்கே போகிறது என்பதைச் சொல்லுவாயா?*

பாகன் : *பூ! இதுதானா? இதையா சொல்ல முடியாது? அது எங்கே போகும்? அது தன் பெட்டையைத் தேடிப்போகிறது!*

தலைவன் : *அது எவ்வளவு விரைவாகப் போகிறது பார்த்தாயா?*

பாகன் : *ஆமாம்! அதிலென்ன வியப்பு!*

தலைவன் : *அதுபோல பொருளைத் தேடிவைத்திருக்கும் நானும் என் காதலியைப் பார்க்க விரைவாகப் போகவேண்டாமா?*

பாகன் : *தலைவ! போகவேண்டாம் என்று யார் சொல்லுவார்கள்?*

தலைவன் : *பின்ஏன் காலந்தாழ்த்துகிறாய்?*

பாகன் : *இதை முன்னரே தெளிவாகச் சொல்லியிருந்தால் செய்திருப்பேன்!*

தலைவன் : *இப்பொழுதுதான் சொல்லுகிறேன், செய்வாயாக! நாம் முன்னே விரைந்து செல்லுமாறு இதுவரையில் குத்தாத உன்னுடைய கூரிய தாற்றுமுள்ளாலே குதிரையைக் குத்தித் தேரைச் செலுத்துவாயாக!*

தலைவனின் உள்ளக்கிடக்கையை அறிந்துகொண்ட தேர்ப்பாகன், தலைவனின் கட்டளைக்கு ஏற்ப தேரை விரைவாகச் செலுத்துகிறான்!

∴ ∴ ∴

இது **நற்றிணை 21-**ஆம் *செய்யுளின் கருத்தை அடிப்படையாகக்கொண்டது. இந்தச் செய்யுளை இயற்றிய புலவர்* **மருதனிளநாகனார்** *என்பவர் ஆவார். இவரை மதுரை மருதனிளநாகனார் என்றும், மதுரை பூதனிளநாகனார் என்றும் கூறுவர். இவர் மதுரையைத் தம்மூராகக் கொண்டவர் என்று தெரியவருகின்றது. இவருடைய செய்யுட்களில் கற்பனைகளும் உள்ளுறையுவமங்களும், வெளிப்படை யுவமங்களும் நயம்படக் காணப்படும். இவருடைய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் காணக் கிடக்கின்றன.*

∴ ∴ ∴

விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர்
அரைச்செறி கச்சை யாப்பழித்(து) அசைஇ
வேண்டமர் நடையர் மென்மெல வருக
தீண்டா வைமுள் தீண்டிநாம் செலற்(கு)
ஏமதி வலவ தேரே உதுக்காண்
உருக்குறு நறுநெய் பால்விதிர்த் தன்ன
வரிக்குரல் மிடற்ற அந்நுண் பல்பொறிக்
காமரு தகைய கான வாரணம்
பெய(ல்)நீர் போகிய வியனெடும் புறவில்
புலரா வீர்மணல் மலிரக் கெண்டி
நாவிரை கவர மாட்டித்
தன்பெடை நோக்கிய பெருந்தகு நிலையே

[நற்றிணை—21.]

[வலவ! இளையர் நடையர் மென்மெல வருக! கானவாரணம் தன்பெடை நோக்கிய பெருந் தகு நிலைஉதுக்காண்! நாம் செலற்கு தீண்டா வைமுள் தீண்டிதேர் ஏமதி! என்று கொண்டு கூட்டவும்.

பொழிப்புரை : பாகனே! விரைந்து செல்லுதலாலே வருத்தந்தரும் மிக்க நடைப்போக்கினையுடைய நம் வீரர், இடுப்பிலே கட்டிய கச்சையின் கட்டை நெகிழ்த்துவிட்டு, அங்கங்கே தங்கியிருந்துவிட்டுத், தாம்தாம் விரும்பியவண்ணம் மெதுவான நடையராய் மெல்ல மெல்ல வருவார்களாக! உருக்கிய நறுமணம் கமழும் நெய்யில் பாலைச் சிதறவிட்டாற்போன்ற, தயிர்க்கடையும்போது எழும் ஒலிபோன்ற குரலையுடைய கழுத்தினையுடைய, அழகிய நுண்ணிய பலவாகிய புள்ளிகளமைந்த கண்டார்க்கு விருப்பம்வரும் ;தகுதிப்பாட்டினையுடைய காட்டுக்கோழி, மழைபெய்தநீர் வடிந்த அகன்ற நெடிய காட்டிடத்தே சுவருத ஈரமணலை நன்றாகத் தோண்டி விடியற்காலையில் இரையாகிய புழுவைக் கவர்தலும், அதனைக் கொன்று தன் பெடைக்கு ஊட்டவேண்டி அப்பெடையை நோக்கிய பெருமையோடு கூடிய நிலையை அதோ பாராய்; ஆதலால், நாம் முன்னே விரைந்து செல்லுமாறு இதுவரையிலும் 'தீண்டாத கூரிய தாற்றுமுள்ளாலே குதிரையைத் தீண்டித் தேரைச் செலுத்துவாயாக!

பரி - செலவு; வீங்கு - மிக்க; இளையர் - வீரர்; யாப்பு - பிணிப்பு; அசைஇ - அவிழ்த்து; வைமுள் - தாற்றுமுள்; ஏமதி - செலுத்துவாயாக; வலவன் - தேர்ப்பாகன்; கான வாரணம் - காட்டுக்கோழி.]

வினையை முடித்து மீளும் காதலன் தன் காதலியைக் காண எவ்வளவு துடிதுடிப்புணர்ச்சியோடு விரைந்தோடிச் செய்வான் என்பதைப் புலவர் இச்செய்யுளில் நயம்பட விளக்கிக்காட்டியுள்ளார். போர்முனைக்குவரும்போது வீரர்களை அக்கரையோடு உடன் அழைத்துக்கொண்டுவந்த தலைவன், திரும்பும்போது, அவர்கள் மெல்லவேண்டுமானாலும் வரட்டும். தான் மட்டும் விரைவாகச் செல்லவேண்டும் என்ற கருத்தைத் தேர்ப்பாகனிடத்தில் தெரிவிப்பதிலிருந்து, தலைவனின் காதலுள்ளத்தின் துடிப்பை அறிந்து

கொள்ளலாம். தேரை இழுத்துச் செல்லும் குதிரைகள் எவ்வளவு விரைவாக ஓடினாலும், அது தலைவனுக்கு விரைவாகத் தெரியவில்லை. காதலியை இன்னும் விரைவாகக் காணவேண்டும் என்று அவன் எண்ணுவதால், குதிரைகளின் ஓட்டம் அவனுக்குக் குறைவாகவே படுகிறது. அதனால்தான் அதுவரையில் பயன்படுத்தாத தாற்றுமுள்ளால் குதிரையைக் குத்தி விரைவாக ஓட்டும்படி தலைவன் கூறுகிறான். இவையெல்லாம் தலைவனின் உள்ள நிலையை எடுத்துக்காட்டும் அறிகுறிகளாகும்.

தலைவன் தன்னுடைய உள்ளக்கிடக்கையைத் தேர்ப்பாகனுக்கு அறிவிக்க, பெட்டைக் கோழியை நோக்கி இரைகொண்டு செல்லும் காட்டுச் சேவலின் செயலைச் சுட்டிக்காட்டியதாகப் புலவர் கற்பித்திருக்கும் கற்பனை படித்துப் படித்து மகிழ்வதற்குரியதாகும்.

இச்செய்யுளில் முல்லை நில ஒழுக்கமே மிகுத்துக் கூறப்படுதலுக்கேற்ப, முல்லை நிலத்திற்குரிய 'உருக்குநெய்யில் பால்துளிகள்', 'தயிர் கடையும் ஒலி' போன்றவைகளை உவமைகளாகக் கூறியிருக்கும் திறன் வியந்தின்புறுதற்குரியதாகும்.

தாற்றுமுள் கொண்டு குதிரையைக் குத்தி விரைவாக ஓட்டும் பழக்கம அக்காலங்களிலும் இருந்திருக்கிறது என்று தெரியவருகிறது.

கடிகாரமும் கைக்கடிகாரமும்

ஆங்கிலத்தில் கடிகாரம் என்பதற்கு க்ளாக் (Clock) என்றும் கைக்கடிகாரத்திற்கு வாட்ச் (Watch) என்றும் பெயராகும்.

க்ளாக் என்ற சொல் டசசு மொழியிலிருந்து பிறந்ததாகும். அதற்கு டச்சு மொழியில் "மணி" என்ற பெயர் இருந்தது. கைக்கடிகாரத்தை முதன் முதல் இரவு முழுதும் கண் விழித்துப் பாராக்கூறும் காவற்காரர்கள் (Watchmen) உபயோகித்ததால் அதற்கு வாட்ச் என்ற பெயர் ஏற்பட்டது.

கடிகாரம் 13-ம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. கைக்கடிகாரங்கள் 16-ம் நூற்றாண்டில் தோன்றின.

முதலில் கடிகாரங்கள் சிறிய 'பீரோ'வைப் போன்று பல அடி நீள அகலங்களைக்கொண்டதாக இருந்தன. முதல் கைக்கடிகாரத்தின் குறுக்களவு ஆறு அங்குலமாகும்.

முதலில் பளு வீழ்ச்சியினால் (Falling of Weights) கடிகாரங்கள் இயங்கின. ஊசல்குண்டு (Pendulam) பொருந்திய கடிகாரங்கள் 17-ம் நூற்றாண்டில்தான் தோன்றின. 1656-ம் ஆண்டில் கிருத்தியன் ஐகென் (Christian Huygens) என்பவர் முதன்முதலாக ஊசல் குண்டுக் கடிகாரத்தைக் கண்டுபிடித்தார்.

ஊசல்குண்டு இல்லாமல் கடிகாரம் இயங்க பல ஆராய்ச்சிகள் நடைபெற்றன. அந்த முயற்சிகளின் முடிவாகக் கைக்கடிகாரம் கண்டுபிடிக்கப்பட்டது. ஊசல்குண்டுக்குப் பதிலாக மிக மெல்லிய, விரைப்புள்ள மயிரிழைக்கம்பி (Hair Spring) ஒன்று பொருத்தப்பட்டது.

இருவகைக் கடிகாரத்திலுமுள்ள மற்ற பாகங்கள் ஒரே தன்மைபெற்றவைதான்.

ஒரு சிறிய கைக்கடிகாரத்திலுள்ள மயிரிழைக்கம்பியானது தலைமயிரின் அரைப்பங்கு கனத்திற்கும் குறைவானதாகும். ஒரு ராத்தல் எடையுள்ள எஃகிலிருந்து 20 மைல் நீளமுள்ள மயிரிழைக்கம்பியை உற்பத்தியாக்கலாம்.

விலை குறைந்த கைக்கடிகாரத்தில் 150 பாகங்களுக்கு மேலும் விலை யுயர்ந்த கைக்கடிகாரத்தில் 800-க்கு மேற்பட்ட பாகங்களும் பொருத்தப்பட்டிருக்கும்.

ஒரு நல்ல கடிகாரம் கவனிப்புடன் ஆண்டுதோறும் சுத்தம் செய்யப்பட்டுக்கொண்டிருந்தால். 200 ஆண்டுகள் வரையிலும் அது நன்றாக ஓடிக்கொண்டிருக்கும்.

திராவிடத்தின் வைரச் சுரங்கம்

வைரம், ஊர் கூட்டும் தோட்டியிலிருந்து உலகாளும் தொண்டைமான் வரையில் பல்ர்க்கும் மகிழ்ச்சி ஊட்டும் கவர்ச்சிப்பொருளாகக் காட்சியளித்துவருவதாகும். வைரத்தின் வனப்பிலும், அதன் வண்ண ஒளிச்சிதறலிலும் மனம் பறிகொடுத்து மயங்காதார் யாரும் இருக்கமாட்டார்கள். முற்றுந்துறந்ததாகக் கூறிக்கொள்ளும் துறவிகள்கூட, வைரத்தைக் கொண்டு அழகுபடுத்துவதிலும்—அழகுபடுத்திக்கொள்வதிலும் களிப்போடு கூடிய தம் கவனத்தைச் செலுத்தவே செய்கின்றனர்.

அழகுக்காக என்றும், ஆடம்பரத்திற்காக என்றும், 'அதிருட்டத்'திற்காக என்றும் பற்பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு வைரத்தை அணியாக அணிந்துகொள்ளும் வழக்கம் மக்களிடையே பழம் பெரும் காலந்தொட்டு இருந்துவருகிவது. மணிகளிலே வைரம் மிக்கப் பெயரும் புகழும் பெற்று விளங்குவதற்குக் காரணம், எளிதாகப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய மிக்க விலைமதிப்புள்ள பொருளாக அது இருந்துவருவதே யாகும். வைரமானது அழகுடையது, அருமையானது, அளவில் சிறியது, எளிதில் அகற்றப்படக்கூடியது, எளிதில் வைத்துக் காப்பாற்றக்கூடியது, என்றும் விலைபோகக்கூடியது, உலக சந்தை எங்கணும் விற்கக்கூடியது என்பனபோன்ற பல்வேறு தன்மைகளையும் கொண்டிருக்கும் காரணத்தால்தான், அது தனி மதிப்புடைய ஒருபொருளாக விளங்கி வருகிறது.

திராவிடம் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் இயற்கைச் செல்வக் குவியல்களிலே வைரம் முக்கியமான ஒன்றாகும். திராவிடத்தின் ஒரு பகுதியாக விளங்கும் ஆந்திரத்தில் வைரச்சுரங்கங்கள் பன்னெடுங் காலமாக வைரமணிகளைக் கொழித்துக்கொண்டிருக்கின்றன. உலகிலேயே மிக்கப் பட்டொளி வீசுவனவும், மிகு புகழும் பெயரும் பெற்றனவும் ஆன வைரங்கள் பலவும் திராவிடத்தின் வைரச் சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டவைகளே யாகும். கோகினூர் (Koh-i-noor), பிட் (Pitt), ஆர்லாப் (Orloff), சான்சி (Sancy), டார்யினூர் (Daryi-naar); நாசாக் (Nassak) போன்ற உலகப் பெயர் பெற்ற வைரங்கள் திராவிடத்தின் ஆந்திர வைரச் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்பட்டவைதாம். நான்கு அல்லது ஐந்து முக்கியமான வைரங்கள்தாம் பிரேசில், தென் ஆப்பிரிக்கா ஆகிய சுரங்கங்களிலிருந்து கொண்டுவரப்பட்டவையாகும். பிரேசிலில் 1725-ஆம் ஆண்டிலும், தென் ஆப்பிரிக்காவில் 1870-ஆம் ஆண்டிலுந்தான் வைரச்சுரங்கங்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கெல்லாம் கண்டுபிடிப்பதற்கு முன்னால், உலக வைரத் தேவையை ஆந்திர வைரச் சுரங்கங்கள்தாம் நிறைவேற்றிக்கொண்டிருந்தன. 1905-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 25-ஆம் நாள் தென் ஆப்பிரிக்காவில் பிரிட்டோரியா (Pretoria) என்ற இடத்திலுள்ள வைரச் சுரங்கத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட கல்லினன் (Cullinan) என்ற 3025¾ காரட் எடையுள்ள வைரக்கல்லைத் தவிர, மற்றபடி ஆப்பிரிக்காவிலோ அல்லது பிரேசிலிலோ எடுக்கப்பட்ட எந்த வைரமும், திராவிடத்தின் மிகப் பழமையான வைரங்களோடு ஈடாக நிற்பதற்கில்லை.

திராவிட வைரச் சுரங்கங்களின் 'பெருமை, பன்னெடுங்காலமாகவே மேலை ஐரோப்பிய நாடுகளில் பரவியிருக்கிறது. சின்பாடு என்ற மாலுமி (Sinbad the Sailor) என்ற ஆங்கில நாவலிலும், கி. பி. 13-வது நூற்றாண்டில் மார்க்கோ போலோ (Marco Polo) என்ற சுற்றுப்பயணக்காரர் எழுதிவைத்த குறிப்புகளிலும் திராவிடத்தின் வைரங்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. ஐரோப்பிய நாடுகள் இந்தியாவிற்குக் கடல் வழி ஒன்று கண்டுபிடித்து இந்தியாவுடன் வாணிகத்தொடர்புகொள்ள விரும்பி முன்வருவதற்கு முக்கிய பொருள்களாக விளங்கியவற்றிலே திராவிடத்தின் வைரமும் ஒன்றாகும். இடைக்காலங்களில், ஐரோப்பாவில் வாழ்ந்த மன்னர்கள், தம்முடியில் இந்தியாவின் வைரம் அதாவது திராவிடத்தின் வைரம் பதிக்கப்படாவிட்டால், அது முடியென்று குறிப்பிடுவதற்குத் தகுதியுடையதல்ல என்னும் கருத்துடையவர்களாக விளங்கினர் என்னலாம். திராவிடத்தின வைரங்கள்தாம், உலக மன்னர்கள் பலரின் மணிமுடிகளுக்கு அழகும் ஒளியும் பலகாலமாக ஊட்டிவந்தன. அண்மையில் ஆந்திரத்தில் அனந்

தப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த விசிரக்கரூர் (Vijrakarur) என்ற சிற்றூரின் வயல்களில் அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்து எடுக்கப் பட்ட வைரக்கற்கள், மிக்க ஒளிவீசும் கற்க ளென மதிப்பிடப்படுகின்றன.

கி. பி. 16-ஆம் நூற்றாண்டில், ஆந்திரப் பகுதியைக் கோல்கொண்டாமன்னர்களும், விசயநகரத்து மன்னர்களும் ஆண்டுகொண் டிருந்தபோது, உலகில் வேறு எங்கும் அது வரையில் காணாத வைரச்சுரங்கங்கள் ஆந்திரப் பகுதியில் இருந்தனவாக டொமின்கோ பீசு (Domingo Paes) என்பாரும், பெர்னியோ நியூ நிசு (Ferneo Newniz) என்பாரும் தாம் எழுதிய குறிப்பு ஏட்டில் குறித்திருக்கிறார்கள். அந்த நாட்களில் சுரங்கங்கள் சிலரிடம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. 25 காரட்டுக்குமேல் எடை யுள்ள வைரங்களையெல்லாம் அரசனுக்குக் கொடுத்துவிடவேண்டும் என்ற உடன்படிக் கையின்பேரில் அவை குத்தகைக்கு விடப்பட் டிருந்தன.

ஒரு நூறாயிரக் கூலிகளுக்குமேல் வேலை செய்துகொண்டிருந்த அந்த வைரச்சுரங்கங் கள் என்ன ஆயின? வைரங்கள் அனைத்தும் எடுக்கப்பட்டாகிவிட்டனவா? அல்லது சுரங் கங்கள் எல்லாம் மறைந்துவிட்டனவா? என் பனபோன்ற கேள்விகளுக்கு டபிள்யூ. டபிள்யூ. பிரான்சிசு (W. W. Francis) அவர்களின் அறிக் கையில் விடைகள் கிடைக்கின்றன. அனந்தப் பூர்மாவட்ட வெளியீட்டை (Anantapur District Gazetteer) அவர் உருவாக்கும்போது அதில் அவர் தம்முடைய அறிக்கையை வெளியிட் டுள்ளார். "ஐரோப்பியர்களால் நடத்தப்பட்ட தென் ஆப்பிரிக்கா வைரச் சுரங்கங்கள் வாழ் வும், வளர்ச்சியும் பெறவேண்டி, ஆந்திர வைரச் சுரங்கங்கள் மூடப்பட்டன" என்னும் கருத்துப்பட எழுதியுள்ளார். அந்தச் சுரங் கங்கள் மீண்டும் தோண்டப்படுமேயானால், திராவிடத்தின் செல்வச்செழிப்பு மேலும் மேலும் ஓங்கி நிற்க வழி ஏற்படும் என்பது உறுதி.

திராவிடத்தின் வைரச்சுரங்கங்களைப் பற்றிய குறிப்புகளைப் பிரெஞ்சு நாட்டுச் சுற்றுப்பயணக் காரரும், வைர வியாபாரியுமான டாவர்னியர் (Tavernier) என்பவர் எழுதிவைத்துள்ளார். அவர் கி. பி. 1636-ஆம் ஆண்டிற்கும், 1662 ஆம் ஆண்டிற்கும் இடையில் ஆறு தடவை கள் வைரக்கற்களைத் திரட்டுவதற்காகத் திரா விடம் வந்து சென்றிருக்கிறார். அவர் குறிப் பிடாத சில இடங்களைப்பற்றிய குறிப்புகளை லார்டு கோவர்டு (Lord Howard) என்ற ஆங்கி லேயர் எழுதி, 1677-ஆம் ஆண்டு சூன் திங் கள் 25-ஆம் நாள் பிரித்தானிய அரசு அவை யிடம் அறிக்கையாகக் கொடுத்திருக்கிறார். திராவிடத்தின் வைரச் சுரங்கங்கள் பற்றிய அவ்வளவு தெளிவான அறிக்கையை வேறு எந்த ஐரோப்பியரும் வெளிப்படுத்தவில்லை என்னலாம்.

பி. வெங்கய்யா என்ற சிறந்த நிலநூல் வித் பனர், வைரச் சுரங்கம்பற்றி 35 ஆண்டுகளுக்கு மேல் ஆராய்ச்சி நடத்தி, ஆந்திரப் பகுதியில், உடைத்தெடுக்கவேண்டிய பெரும் வைரப் பாறைகள் அகழ்ந்து காணப்படாமல் புதைந்து கிடக்கின்றன என்று தாம் எழுதிய நூலில் (Genesis and Matrix of the Diamond) குறிப் பிட்டுள்ளார். அவர் லார்டு கோவர்டு எழுதிய குறிப்புகளையும் ஆங்காங்கு காட்டியுள்ளார். இவர்களைத் தவிர எசு. டபிள்யூ. வாய்சே (H. W. Voysey), பி. ஈனே (B. Heyne), வி. பால் (V. Ball), லா டவுச்சு (La Touohe) என்போரும் திராவிடத்தின் வைரச் சுரங்கங்களைப் பற்றி எழுதியிருக்கின்றனர்.

பி. வெங்கய்யா தாம் செய்த ஆராய்ச்சியின் விளைவாக ஆந்திரத்தின் சில பகுதிகளில் வைரங்கள் தோண்டி எடுப்பதற்கான வாய்ப்பு கள் இருக்கின்றன என்ற உண்மையைத் தெள்ளத் தெளிவாக விளக்கிக்காட்டியுள்ளார்.

அனந்தப்பூர் மாவட்டத்தில் (1) விசிரகரூர் (Vijrakarur) (2) லட்டாவரம் (Lattavaram) (3) கொங்கனப்பள்ளி (Konganapalli) ஆகிய இடங் களில் வைரம் கிடைக்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். விசிரகரூர் என்பது குண் டக்கல் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒன் பது கல் தொலைவிலுள்ள சிற்றூராகும். இது பழைய நாட்களில் வைரச்சுரங்கங்கள் இருந்த இடமாகும். இப்பொழுதுகூட பெரு மழை பெய்தால், இச்சிற்றூரின் பகுதியில், தரையின் மேற்பரப்பில் பொறுக்கி எடுக்கும் அளவுக்கு வைரக்கற்கள் ஆங்காங்கு சிதறிக் கிடக்கின்றன. லார்டு கோவர்டுவின் அறிக்கை யில்கூட இந்த இடம் மிக முக்கியமானதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. லட்டாவரம் என் பது விசிரகரூர் என்ற இடத்திலிருந்து பதி னைந்துகல் தொலைவிலுள்ள ஊராகும். கொங்கனபள்ளி என்பது கூட்டி புகைவண்டி நிலயத்திலிருந்து வடமேற்குப் பக்கத்தில் பத்துகல் தொலைவிலிருக்கிறது.

கர்னூல் மாவட்டத்தில் (1) துக்காலி (Tuggali), (2) பங்கனபள்ளி (Banganapalli), (3) கன்னமடகாலா (Kannamadakala), (4) இராமுல்கோட்டா (Ramulkota) ஆகிய இடங்

ரில் வைரக்கற்கள் புதைந்து கிடக்கின்றன, ராமுல்கோட்டாவிலும் பிற இடங்களிலும் ரய வெண்மையான நல்ல நீரோட்டம் அமைந்த வைரங்கள் மிகவாகக் கிடைக்கப் பற்றன என்ற செய்தியை 17-வது நூற் ண்டில் சுற்றுப்பயணம் செய்த டாவர்னியர் மது குறிப்பில் வெளியிட்டுள்ளார்.

கடப்பை மாவட்டத்தில் (1) சென்னூர் hennur), (2) கொண்டபேட்டா (Kondapeta)) உப்ளாபள்ளி (Woblapalli) இடங்களில் ல்ல வைரக்கற்கள் இருப்பதாக நில ஆராய்ச் யின் மூலம் தெரியவருகிறது. இங்கெல்லாம் வைரங்கள் கிடைக்கும் உண்மையைக் கடப்பை ற்றிய நூலில் (Cuddapah Manual) கிரிப்பிள் ribble) என்பார் விளக்கமாக எழுதியுள்ளார்.

கிருட்டிண மாவட்டத்தில் கிருட்டிண ஆற் ன் இடதுகரைப்பக்கம் விசயவாடாவுக்கும் தராபாத் மாநில எல்லைக்கும் இடையிலுள்ள குதியில் வைரங்கள் புதைந்துகிடக்கின்றன.

குண்டூர் மாவட்டத்தில் கொல்லூர் (Kollur) ன்ற இடத்தில் நீண்டகாலமாக வைரச் ரங்கம் இருந்து வருகிறது. 1645-ஆம் ஆண்டு ாவர்னியர் இந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் சய்தபோது இந்தச் சுரங்கத்தில் சுமார் ,000 தொழிலாளர்கள் வேலைசெய்துகொண் ருந்ததாகக் குறிப்பு எழுதிவைத்துள்ளார். காகினூர் என்ற உலகப்புகழ்பெற்ற வைரம் ந்தச் சுரங்கத்திலிருந்து தோண்டி எடுக்கப் ட்டதாகும்.

விசயவாடாவிலிருந்து இருபது கல் தொலை லுள்ள பாரிடாலா (Paritala) என்ற இடத் ல் பன்னெடுங் காலமாகவே வைரச் சுரங்கம் தாண்டப்பட்டு வந்திருக்கிறது. இந்த வைரச் ரங்கத்தைக் கனகப்பாடு (Kanakapadu) ன்று பண்டைக்காலத்தில் அழைத்துவந் ருக்கின்றனர். கோகினூரைவிட அளவிலும் திப்பிலும் ஐந்துமடங்கு சிறந்து விளங்கும் ட் (Pitt] என்ற புகழ்பெற்ற வைரக்கல் ந்தச் சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது ான்.

மேலே குறிப்பிடப்பட்ட இடங்களிலெல் ாம், இப்பொழுது வைரங்கள் அடியோடு அற்றுப்போய்விட்டனபோலும் என்று வைரங் ளின் இருப்புப்பற்றிய விவரம் அறியாதவர் ள் எண்ணக்கூடும். ஆனால் உண்மை அப் டியல்ல. தோண்டி எடுக்கப்படாத வைரங் ள் இன்னும் ஏராளமாக இருக்கவே செய்யும். திப்பிலும் புகழிலும் மிக உயர்ந்து விளங்கும் வரங்களை உண்டாக்கிய இந்தச் சுரங்கங்களை விசயநகரத்து மன்னர்களும், பிறகு வந்த முக லாய மன்னர்களும் தங்களுடைய சொந்தச் சுரங்கங்களாக இவற்றைக் கொண்டிருந்த தால், மிகவாக அகழ்ந்து காணவேண்டும் என்ற அக்கரையில்லாமலிருந்தார்கள். பெரும் பாலான சுரங்கங்கள் 12 அடிக்கு ஆழமாகத் தோண்டப்படவில்லை என்றே கூறலாம். அதற்கும் அடியில் ஏராளமான விலையர்ந்த வைரங்கள் இருக்கக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் இப்பொழுது நல்ல முறையில் தென்படுகின்றன.

17-வது நூற்றாண்டில் முகலாய அரசினர் என்ன காரணத்தினாலோ திராவிடத்திலிருந்த வைரச் சுரங்கங்களை மூடும்படியாகக் கட்டளை பிறப்பித்துவிட்டனர். முகலாயர்களை அடுத்து வந்த ஆங்கிலேயர்கள் பிரேசில், தென் ஆப்பி ரிக்கா வைரச் சுரங்கங்களுக்கு வாழ்வளிக்க வேண்டி, திராவிடத்தின் வைரச் சுரங்கங் களின்மீது அக்கரை செலுத்தாமலே இருந்து விட்டனர். எசு. டபிள்யூ. வாய்சேய் என்பவர் 1820-ஆம் ஆண்டில் வெளிப்படுத்திய அறிக்கை ஒன்றில் கீழ்க்கண்ட கருத்தினை வெளியிட்டுள்ளார். அது வருமாறு : “இந்தச் சுரங்கங்களில் தோண்டிப் பார்க்கப்படாத பகுதிகள் இன்னும் ஏராளமாக இருக்கவே செய்கின்றன. உலகப் புகழ்பெற்ற வைரங்கள் பலவற்றைத் தந்த இந்தச் சுரங்கங்களின் தொடப்படாத பகுதிகளில், அவற்றைப் போன்ற வைரங்கள் பல இருக்கக்கூடும். போதுமான அளவு மூலப்பொருள் போடப் படாத காரணத்தாலும், பயிரிடும் நிலங்களை அகழ்ந்துகாண நிலச் சொந்தக்காரரான சமீன் தார்கள் இடமளிக்காத காரணத்தாலும் மேற் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்த வழியில்லாமல் போகிறது. விலைகுறைவாகவும், ஏராளமாகவும் பிரேசில் வைரங்கள் சந்தைகளில் கொண்டு வந்து வைக்கப்படுகின்ற காரணத்தால், இந்தச் சுரங்கங்களின்மீது மிக்க கவனம் செலுத்தப்படவில்லை.”

இந்த உண்மைகளையெல்லாம் அடிப்படை யாகக்கொண்டு நாடு நல்ல திட்டம் தீட்டி செயலாற்ற முற்பட்டால், திராவிடத்தின் வைரச் சுரங்கங்கள் மீண்டும் வேலை செய்யத் தொடங்கி பெரும்பயன் தருவதோடு, திராவி டத்தின் வளத்தை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

[இது தோழர் பரசுராமையா பிங்கலி என்பவர் எழுதிய “ஆந்திர தேசத்தின் வைரச்சுரங்கங்கள்” என்ற ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி எழுதப் பட்டதாகும்.]



(27)

"குணநிதி செய்த பாவங்களைக் கணக்கிடுகிறீர்களே யொழிய, அவன் செய்த புண்ணிய காரியங்கள் உங்களுக்குத் தெரியவில்லை!" என்று சிவகணங்கள் யமதூதர்களிடம் சொன்ஞர்கள்.

"குணநிதிக்கு புண்ணியகாரியங்கள் என்ருலே என்னவென்று தெரியாது!"

குணநிதி செய்த புண்ணிய காரியங்களைப் பற்றி சிவகணங்கள் சொல்ல ஆரம்பித்தனர். "இறப்பதற்கு முன், இரவு பூராவும் சிவன் கோயிலில் அவன் உட்கார்ந்திருந்தான். அன்று சிவராத்திரி, நடக்கும் பூசைகளைப் பார்த்தபடி, சுவாமியை இடைவிடாமல் தரிசித்தபடி உட்கார்ந்திருந்தான். ஆகவே சிவராத்திரியில் இரவு பூராவும் சிவன் கோயிலில் கண்விழித்து, சிவபெருமானை தரிசித்துக் கொண்டிருந்ததற்கான புண்ணியம் குணநிதிக்குக் கிடைத்திருக்கிறது. சிவராத்திரியின் மகிமை உங்களுக்குத் தெரியாதோ! ஏழேழு பிறவிகளில் செய்த எண்ணற்ற பாவங்களும், ஒரு சிவராத்திரியில் கண்விழித்து சிவபெருமானை தரிசித்துக்கொண்டிருந்தால் போய்விடும்."

யமதூதர்கள் திகைத்து நின்றனர். சிவன் கோயிலில் இருந்த பிரசாதத்தைத் திருட, குணநிதி விழித்திருந்தான். அன்று சிவராத்திரி என்பது அவனுக்குத் தெரியாது. அர்ச்சகர் எப்பொழுது பூசைகளை முடித்து வெளிவருவார் என்பதற்காக, அவன் பூசை நடப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தான். அது சிவகணங்களால் மாபெரும் புண்ணியமாக ஆக்கப்பட்டுவிட்டது.

"அது மட்டுமல்ல, மற்ருெருவகையிலும் குணநிதி ஒரு புண்ணிய காரியத்தைச் செய்திருக்கிருன். சிவன்கோயிலில் சிவபெருமானின் திருவுருவத்திற்கு முன் ஏற்பட்டிருந்த விளக்கு அணையும் தருவாயிலிருந்தது. அதை குணநிதி தூண்டிவிட்டான். அதனுல் இருள் நீங்கி, சிவபெருமான் சந்நிதானத்தில் வெளிச்சம் பரவியது. இதுவும் ஒரு புண்ணிய காரியமன்ருே? எம்பெருமான் சந்நிதானத்தை ஒளிபெறச்செய்ய ஒரு விளக்குப்போட்டால் அது மிகப்பெரிய பாவங்களையும் போக்கிவிடும் என்பது உங்களுக்குத் தெரியாதா?"

யமதூதர்கள் தங்களுடைய பாசக்கயிற்றை அவிழ்த்துக்கொண்டு, குணநிதியை சிவகணங்களிடம் விட்டுவிட்டுச் சென்றனர்.

நரகவாதனைகளிலிருந்து, குணநிதி காப்பாற்றப்பட்டது மட்டுமல்லாமல், அவன் செய்த புண்ணியத்துக்கு—அதாவது சிவராத்திரியில் விழித்திருந்தது, சிவன்கோயிலில் அணைந்து போகவிருந்த விளக்கைத் தூண்டிவிட்டது ஆகிய புண்ணியத்துக்கு—அவனுக்கு மேலும் பலன் கிடைத்தது. "வாரும், குணநிதி! நீ காட்டிய சிவபக்திக்கு மிகவும் மெச்சினோம்! நீ செய்த நல்ல காரியங்களுக்காக, கலிங்க நாட்டில் அருந்தமன் என்ற அரசனுடைய குமரனைகப் பிறப்பாயாக!" என்று சிவகணங்கள் சொல்லி, தங்களுடைய தலைமையிடமான கைலையங்கிரிக்குச் சென்றனர். குணநிதி கலிங்கநாட்டில் அரசகுமாரனைகப் பிறந்தான்.

அருந்தமன் தனது மகனுக்குத் தமன் என்ற பெயரிட்டுச் சீராட்டி வளர்த்தான். சிறுவயதிலிருந்தே தமன் மிகச்சிறந்த பக்திமானைக இருந்தான், பூர்வசென்ம வாசனையால் சிவன்கோயிலில் விளக்கேற்றுவதால் உண்டாகும் பலன்களை அவன் தெரிந்திருந்தான்.

நாட்டின் அரசனைக் தமன் ஆனதும்; சிவன் கோயில் சந்நிதானம் நிறைய விளக்குகள்

றிவந்து, தினந்தோறும் பூசைகள் நடத்தி
ர. சிவபக்தர்களுக்கு ஏராளமான தான
மங்கள் செய்தான். ஒரு விளக்கு—அது
திருடப்போன சமயத்தில், வழிதெரிவதற்
க ஏற்றப்பட்ட விளக்கு, செய்த பாவங்களை
ல்லாம் போக்கி, மறுபிறப்பில் அரசகுமார
ச் செய்ததென்றால், ஆயிரக்கணக்கான
க்குகளை அநேக நாட்கள் ஏற்றினால் எவ்
வு லாபம் கிடைக்கும்! கோயில்களில்
க்கேற்றி பூசைசெய்துவந்த தமன் இறந்த
ம், அளகாபுரிக்கு அரசனாக அவன் ஆக்கப்
டான். குபேரன் என்ற பெயர் தரப்பட்டது.

முதல்பிறவியில், குணநிதி, ஒரு விளக்கைத்
ண்டிவிட்டதால் அடுத்த பிறவியில் அரச
மாரனாக ஆனான். இரண்டாவது பிறவியில்
யிரக்கணக்கான விளக்குகளை சிவ சந்நிதா
த்தில் ஏற்றிவிட்டதால், கடைசியாகக்
பேரனாக ஆனான்.

குபேரன் நன்றிமறவாதவனாகி, காசியில்
ந சிவலிங்கத்தை வைத்துப் பூசைசெய்து
ந்தான். சிவபெருமானை நினைத்துப் பல
லம் தவம் செய்தான். கடைசியாகக் குபே
ர செய்த தவத்தை மெச்சி, சிவபெருமான்
மாதேவியாருடன் காட்சியளித்தாராம். அந்
க் காட்சியைப் பின்வரும் பாடல், காசிக்காண்
ம் என்ற புராணத்திலுள்ள பாடல் தெளி
க்குகிறது.

ன்ன காலையின் ஆங்கவன் தவத்தினை வியந்து
ன்ன மூவெயின் முருக்கிய முக்கணெம்பெருமான்
ான்ன வாஞ்சுணங் கரும்பிய புணர்முலையுமையாள்
ன்றே டுஞ்சுடர்ப் பிழம்பென அவ்வுழிச்சார்ந்தான்.'

அன்ன காலையில் - அப்படிப்பட்ட காலத்
ல்; ஆங்கவன் தவத்தினை வியந்து - குபே
ன் செய்த தவத்தை மெச்சி; முன்னம் மூவெ
ன் முருக்கிய - முன்பு மூன்றுபுரங்களை
ரித்த; முக்கண் எம்பெருமான் - மூன்று
ண்களையுடைய சிவபெருமான்; பொன்ன
ாம் சுணங்கு அரும்பிய - பொன்போன்ற
தமல் படர்ந்து; புணர் முலை உமையாள் தன்
னொடும் - ஒன்றோடொன்று மோதும்படி
டைத்து எழுந்த முலைகளையுடைய உமாதே
வியாருடன்; சுடர்ப்பிழம்பென அவ்வுழிச்
சார்ந்தான் - சோதிமயமாக அவ்விடத்து வந்
தார்.

சிவபெருமானும் உமாதேவியாரும் காட்சி
ளித்தார்கள் என்பதற்கு வடமொழிப் புரா
ணத்தின் தமிழ்மொழிபெயர்ப்பாளர்கள் இந்த
ஓவியத்தைத் தருகிறார்கள். முப்புரங்களை
எரித்த மூன்று கண்களையுடைய சிவன்—இது
சிவபெருமானைப்பற்றிய வர்ணனை. உமாதேவி
யைப்பற்றிச் சொல்லும்பொழுது வர்ணனை
சற்றுப் பருத்துவிடுகிறது. "பொன்போன்ற
தேமல் படர்ந்து புடைத்து எழுந்த தனங்களை
யுடைய உமாதேவி" உலகமாதாவாம் உமா
தேவியார் இவ்வாறு சிறப்பித்துக் கூறப்படு
கிறார்! புராணக்காரரின் கவனம் அம்மையாரின்
மார்பகத்தை அளவிடுவதில் சென்றுவிடு
கிறது. அதுமட்டுமல்ல, உமாதேவி அணிந்
திருந்த ஆடையின் மென்மையோ, அல்லது
புராணக்காரர் கண்களின் கூர்மையோ, மார்ப
கத்தில் படர்ந்திருக்கும் தேமல்கள்கூட படத்
தில் வரையப்பட்டுவிடுகின்றன. காவியத்தில்
தீட்டப்படுகின்றன. கடவுள் கதை! பாவங்
களை அறுத்து புண்ணியலோகத்துக்கு
அனுப்பவேண்டிய பக்தி வரலாறுகள்!
அதில் அம்மையாரின் திருவுருவம் அவ்வாறு
வர்ணிக்கப்பட்டுள்ளது! அந்த வர்ணனையை,
புராணக்காரர் தமது பக்தி மிகுதியால் சேர்த்
தாரோ, அல்லது புராணத்தைப் படிப்பவர்
களுக்கு உற்சாகமிருக்கவேண்டுமென்று புனைந்
தாரோ, எப்படியிருந்தாலும், கதையில் பின்பு
வருகிற நிகழ்ச்சிக்கு அந்தக் காட்சி—உமாதே
வியின் கோலம் ஒரு காரணமாக அமைந்
திருக்கவேண்டும்.

குபேரன் தவஞ்செய்துகொண்டிருந்த இடத்
தில் சிவபெருமான் உமாதேவியாருடன்
தோன்றி, "அளகாபுரியை அரசுசெய்கிற
குபேரா! நீ செய்த அரிய தவத்திற்கு மனங்
களித்தோம். மனதில் விரும்பியவற்றைச்
சொல்லுக. நாம் அவற்றைத் தருவோம்!"
என்று கேட்டார்.

சிவபெருமான் கேட்பது குபேரன் காதில்
விழுந்ததேயொழிய, அவரைப் பார்க்கமுடிய
வில்லை. சிவபெருமான் தோற்றம் ஆயிரக்
கணக்கான சூரியர்கள் ஒன்றுகூடி ஒளிவிட்
டால் எப்படியிருக்குமோ அப்படிப்பட்டதாம்.
அதனால், அவர் காட்சியளித்தபொழுது குபே
ரனால் நன்றாகப் பார்க்கமுடியவில்லை.

குபேரன் வணங்கி, "ஈசனே! கணக்கில்
லாத சூரியர்கள் உதயமானாற்போல் விளங்கும்
தேவரீரது உருவத்தைக் காணமுடியாமல்,
என் கண்கள் கூசுகின்றன. தங்களுடைய
திருவுருவத்தைக் காணுவதற்கு என் கண்
களுக்கு அருள்புரியவேண்டும்!" என்று கேட்
டுக்கொண்டான். சிவபெருமான் அவ்வாறே
அருள் தந்தார்.

குபேரன் கண் கூசாதபடி, சிவபெருமானைத் தரிசித்தான். பின் என்ன தவம் செய்து இந்த அம்மையார் முழுமுதற் கடவுளின் பக்கத்தில் இடம் பெற்றார்களோ என்று நினைத்து, உமா தேவியாரின் திருவுருவத்தை குபேரன் தரிசித் தான். சிவனைத் தரிசித்ததைவிட, உமாதேவி யாரை சற்று ஆச்சரியத்துடன்—ஆர்வத் துடன் குபேரன் தரிசித்தான். குபேரன் பார் வையில், பக்தி மட்டுமல்லாமல் வேறு ரசனை யும் தோன்றியிருக்கவேண்டும். ஏனென்றால், குபேரன் தன்னை அவ்வாறு பார்ப்பதைக் கண்ட உமாதேவியாருக்குக் கோபம் வந்த தாம். "இவன் யார் வஞ்சகன்?" என்று கோபித்தார்களாம். உடனே உமாதேவியா ரின் உருவத்தை வஞ்சனையுடன் பார்த்த ஒரு கண் அவிந்துவிட்டது.

குபேரன் சிவபெருமானைப் பார்த்தான், பின் உமாதேவியாரைப் பார்க்கும்பொழுது இவன் வஞ்சகன் என்று அவர்கள் கோபித்தார்கள். பார்வையில் ஏற்பட்ட மாறுதல்! காரணம் எதுவாக யிருக்கும்? புராணக்காரர் சொல்ல வில்லை, ஆனால் முதலில் உமாதேவியாரின் கோலத்தை வர்ணித்திருக்கிறார். "பொன் போன்ற தேமல் படர்ந்து புடைத்து எழுந்த தனங்களையுடைய உமையாள்!" அப்படிப் பட்ட உமையாளைப்பார்த்தபொழுது, குபேரன் பார்வையில் தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. "வஞ்சகன் யார்?" என்று உமாதேவியார் கோபித்தார்கள். குபேரனின் ஒரு கண் அவிந்துவிட்டது.

கண்ணிழந்த குபேரன் புலம்பினான். அவ னிடம் இரக்கங்கொண்ட சிவபெருமான், தன் பக்கத்திலிருக்கும் உமாதேவியைப் பார்த்து, "பெண்ணே! இவன் உனது தவப்பெருக்கத் தைப் பார்த்து யோசித்துப் பார்த்துக்கொண் டிருந்தானேயல்லாமல், வேறுவகையில் ஒன் றுமில்லை, அவனைக் கோபிக்காமல், மீண்டும் அவனுக்குக் கண்ணைத் தந்து அருள்புரிவா யாக!" என்று கூறினார். அதன்படி உமா தேவியார், குபேரன் செய்த பிழையைப் பொறுத்து, அவிந்த கண்ணைப் பொற்கண் ணாக ஆக்கினார்கள்.

கண் பார்வை பெற்றதும், குபேரன் சிவ பெருமான் திருவடிகளையும், உமாதேவியாரின் திருவடிகளையும் (முழுஉருவங்களையும் பார்த் தால் வரும் ஆபத்தை அவன் உணர்ந்திருக்க வேண்டும்) தரிசித்துவிட்டு, பெருஞ்செல்வங் களைப் பெற்று, அளகாபுரிக்கு அரசனாக ஆண்டுவந்தான்.

காசியில் குபேரன் வைத்துப் பூசித் லிங்கம், குபேரலிங்கம் என்ற பெயருட புராணப் பட்டியலில் சேர்ந்தது.

எட்டு திக்குகளில் வடக்குத்திக்குக்கு குபே ரன் தலைவனாகவும், அளகாபுரி அவனது தல மையிடமாகவும் ஆகியது. அவன் குதிரை மீதும், கிளிமீதும் உலவிவருவான். தேவர்களி லெல்லாம் அளவிறந்த செல்வத்தை அடை தவன் குபேரனே. ஒரு சமயம், திருப்பதியில் குடிகொண்டிருக்கும் வெங்கடேசப்பெருமாள் மனைவிதேடி லட்சுமியைத் திருமணம் செய்து கொள்ள முற்பட அந்தத் திருமணத்தி ஏராளமான பொருட்செலவு ஏற்பட்டதா மும்மூர்த்திகளில் ஒருவராகத் திருமா இருந்தபோதிலும், கல்யாணம் செய்வதற் கடன் வாங்கவேண்டிய நிலை அவருக்கு பிறந்தது. மனிதர்களுக்குத்தான் இந்த தொல்லைகள் என்றாலும் கடவுளர்க்கும் இத் கைய கடன் தொல்லைகள் ஏற்படுகின்றன திருமாலுக்குத் தொல்லையென்றால், யாரா கடன் கொடுக்கமுடியும்? வெங்கடேசப் பெரு மாள் கேட்ட அளவு தொகை எவரிடமு கிடைக்கவில்லையாம். கடைசியாக, அவ குபேரனைப் போய் கடன் கேட்டாராம். குபே ரன் அந்தக் கடனைத் தந்தான். அந்த பணத்தை வாங்கியபின்தான் வெங்கடேச பெருமாளால் தனது கல்யாணத்தை நடத் திக்கொள்ள முடிந்தது.

கல்யாணத்திற்கு ஏராளமான கடனை வெங் கடேசப் பெருமாள் வாங்கியிருந்தார். அதனை ஒரேயடியாகத் திருப்பித்தர முடியவில்லை கொஞ்சங்கொஞ்சமாக அவர் செலுத்தி வரு கிறாராம். இன்றளவும் அந்தக் கடன் தீர வில்லை. பக்தர்கள் திருப்பதி உண்டியலில் போடும் பணம், குபேரனுக்குக் கொடுக்க வேண்டிய கடனுக்காகச் சேர்வதாக ஐதீகம் பெருமாள் குபேரனிடம் பட்ட கடன் எவ்வ ளவோ யாருக்கும் தெரியாது. ஆனால் கடவுள் பட்ட கடனை அடைக்க பக்தர்கள் ஏராளமாக உதவிவருகிறார்கள்!

வருணன்

கடல்களுக்கும், நீர்நிலைகளுக்கும் தலைவனாக இருப்பவன். எட்டுத் தேவர்களில் அவன் ஒருவன். வருணன் அந்தப் பதவியை அடை வதற்குமுன் கருத்தமபிரசாபதி என்பவ ருடைய மகனாக சுசிட்டுமன் என்ற பெயரில் வளர்ந்துவந்தான்.

கருத்தம பிரசாபதி என்ற பிராமணர் தவத்திலும் ஆசாரத்திலும் பெயர் பெற்றவராம். ஒருநாள் அவர் தனது பிள்ளை சுசிட்டுமனை அழைத்துக்கொண்டு கங்கைக் கரைக்குப் போனார். கரையில் மரத்தடியில் தந்தை உட்கார்ந்து, சிவபெருமானைத் தியானம் செய்துகொண்டிருந்தார். சிறுவனான சுசிட்டுமன் தன்னையொத்த மற்ற பிள்ளைகளுடன் ஆற்றில் இறங்கி விளையாடிக்கொண்டிருந்தான்.

அப்பொழுது ஒரு முதலை வந்து சுசிட்டுமனைப் பற்றி இழுத்துக்கொண்டுபோனது. மற்ற சிறுவர்கள் அலறியும், கூச்சலிட்டும், கற்களை விட்டெறிந்தும், முதலை பையனை இழுத்துக்கொண்டு, தண்ணீருக்குள் மறைந்து போனது. சிறுவர்கள் ஓடிவந்து, கரையில் உட்கார்ந்திருந்த கருத்தம பிரசாபதியிடம் "முதலை உமது பிள்ளையை இழுத்துக்கொண்டு போகிறது!" என்று சத்தம்போட்டுச் சொன்னார்களாம். ஆனால் மகனை ஒரு முதலை பற்றிக்கொண்டு செல்கிறது என்பதைக் கேள்விப்பட்டுங்கூட தந்தை அசையாது உட்கார்ந்திருந்தார். ஏனென்றால் அப்பொழுது அவருடைய மனம் சிவபெருமான் ஒருவரை மட்டும் நினைத்துக்கொண்டிருந்ததாம். இந்த உலகம் பற்றிய கவனம்—கவலை அவருக்கு இல்லை. சிறுவர்கள் எவ்வளவு கூச்சல்போட்டும், கருத்தம பிரசாபதி அசையாது உட்கார்ந்திருந்தார்.

சிறுவனை முதலை விழுங்கியது, முதலையை கங்கை அடித்துக்கொண்டுபோய் கடலில் சேர்த்தது.

சிவத்தியானத்தில் இருக்கும் ஒருவரின் மகன் முதலையுடன் கடலில் துடிப்பது கண்டு, சிவகணங்களுக்குக் கோபம் வந்தது. சிவகணத்தலைவன் சமுத்திரராசனைக் கூப்பிட்டு, "சிவகுற்றம் செய்திருக்கிறாய் நீ?" என்று கோபித்தான்.

சமுத்திரராசன் மெய்சிலிர்த்து, "சிவகுற்றம் நான் செய்யவில்லையே!" என்று குழறினான்.

"சிவபக்தர் ஒருவரின் மகன், முதலை வயிற்றில் அடைபட்டிருக்கிறான். அந்த முதலை உன் கடலில் புகுந்திருக்கிறது. நீ எப்படி அதை அனுமதித்தாய்?"

"ஐயோ! எனக்கொன்றும் தெரியாதே! இதோபோய் அவனை விடுவிக்கிறேன்," என்று கடலரசன் கடலுக்குத் திரும்பிவந்து, முதலையை இழுத்துவரச்செய்து, சுசிட்டுமனை வெளியேக்கொண்டுவந்து, கடலில் விளையும் முத்து, பவழம் போன்றவைகளால் ஆன உயர்ந்த அணிவகைகளை அவனுக்குச் சூட்டி, அவனை விழுங்கிய முதலைமீதே சிறுவனை உட்காரவைத்து, கங்கைக்கரைக்கு அழைத்து வந்தான்.

கருத்தமபிரசாபதி இன்னும் தியானத்தை விட்டு எழாமல் இருந்தார். கடைசியாக அவர் தியானந்தெளிந்து கண்விழித்ததும், சமுத்திர ராசன் அவர்தாள் வணங்கி, "வேதியர் பெருமானே! நான்கு வேதங்களை உணர்ந்த கருத்தமபிரசாபதியே! இதோ உமது மகன்!" என்று சுசிட்டுமனை முன்வைத்தான். வேதியர் கண்ணைமூடி தியானத்தில் உட்கார்ந்திருந்தபோதிலும், ஞானதிருட்டியால் நடப்பதெல்லாம் அவருக்குத் தெரிந்திருந்ததாம். மகனை முதலை விழுங்கியது, சிவகணத்தலைவர் கடலரசனை எச்சரித்தது, பின் முதலை முதுகில் சுசிட்டுமாரன் ஏறிவந்தது எல்லாம் அவருக்குத் தெரிந்தவையே. எனவே குமாரனைக் கொண்டுவந்துவிட்டதும் என்ன நடந்தது என்று கேட்டுக்கொள்ளாமல், மகனை அருகழைத்து, அணைத்து, மகிழ்வுகொண்டார்.

தந்தையின் தவவலிமையைப் பார்த்ததும், சுசிட்டுமாரனுக்கும் தவம் செய்யவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று, அதன்படி தந்தை அனுமதிக்க சுசிட்டுமாரன் காசிநகரை அடைந்து, அங்கு சிவபெருமானின் அழகிய உருவமான இலிங்கத்தைப் பிரதிட்டை செய்து, தவஞ்செய்தான்.

தவத்தின் முடிவில் சிவபெருமான் தோன்றி, தண்ணீருக்கெல்லாம் தலைவனாகவும், அட்டதிக்குகளில் ஒன்றுக்குத் தேவனாகவும் சுசிட்டுமாரனை ஆக்கிச்சென்றார். சுசிட்டுமாரன் அதிலிருந்து வருணன் என்ற பெயரால் அழைக்கப்பட்டான்.

வருணன் தேவர்களில் ஒருவனாக, அதிலும் அட்டதிக்குத் தேவர்களில் ஒருவனாக உயர்ந்ததும், தேவர்களைப் போன்ற நடையுடை பாவனைகளையும், கல்வியறிவையும் பெறவேண்டியதாயிற்று. அதனால் வருணன் நல்லதொரு குருவைத் தேடியலைந்து, கடைசியாக சிறந்த குரு பிரகஸ்பதிதான் என்பதைக் கண்டு, அவரையடைந்தான். தேவர்களின் குருவான பிரகஸ்பதியும் அவனைத் தனது மாணவனாக ஏற்றுக்கொண்டார். வருணனும் குருபக்தி மிகுந்தவனாய், குரு சொல்லித்தருபவைகளை மிகப் பொறுப்புடன் கற்றுவந்தான். அன்றியும் குருகுலத்தில் இருந்ததால், குரு பர்ண

சாலைக்கு வேண்டிய அன்றாட வேலைகளையும் வருணன் செய்துவந்தான்.

ஒருசமயம் பிரகஸ்பதி தேவசபைக்குச் சென்றிருந்தார். அங்கு இந்திரனுக்குச் சிலபல யோசனைகளைத் தந்ததும், பர்ணசாலைக்கு மிகுந்த களைப்புடன் திரும்பி வந்தார். குரு வருகிறாரென்றால், எப்பொழுதும் தயாராக இருந்து, எதிர்கொண்டழைத்து, காலைக் கழுவி, விசிறிகொண்டு விசிறி உபசாரம் செய்யும் வருணன் அப்பொழுது எதிர்கொண்டழைக்க வரவில்லை. என்ன ஆச்சரியமாயிருக்கிறதேயென்று, மரத்தடியில் போட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து, " வருணா! வருணா!" என்று கூப்பிட்டார். திரும்பிப் பார்ப்பதற்குள்ளேயே, " ஏன், சுவாமி!" என்று வருபவன், இன்று கூவியழைத்தும் வரவில்லை. வேறு வேலைகளில் ஏதேனும ஈடுபட்டிருக்கிறானோ என்று காத்திருந்தும் அவனைக் காணோம். ஒருவேளை பர்ணசாலையில் ஏதாவது செய்துகொண்டிருக்கிறானோவென்று பார்த்தார். அங்கும் இல்லை. " எங்கே போயிருப்பான்? ஒருவேளை தாரை வேலையினிமித்தம் அனுப்பியிருப்பாளோ!" என்று யோசித்து, " தாரா! தாரா!" தனது பத்தினி தாரையைக் கூப்பிட்டார். பதில் இல்லை.

" தாரா! தாரா!" மறுபடியும் பிரகஸ்பதி உரக்கக் கூப்பிட்டார். கூப்பிட்ட குரலுக்கு வராமல் அவளுக்கு வேறென்ன வேலை! பிரகஸ்பதிக்குக் கோபம் வந்தது. "கூப்பிடுவது கேட்காமல், என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கடிந்துகொண்டு, தாரையிருக்கும் பர்ணசாலை அறைக்குள் போனார் தாரையை அங்கும் காணோம். வேகமாக வெளி வந்து, பக்கத்திலெல்லாம் தேடினார்.

தாரையைக் காணோம்.

எங்குபோயிருப்பாள்? தேவகுரு யோசித்தார்.

தாரை மட்டுமல்ல, வருணனையும் காணோமே

இரண்டுபேரையுங் காணோமே! இரண்டு பேரும்......

பிரகஸ்பதிக்கு இப்பொழுதுதான் ஞானோதயம் உண்டாயிற்று. " ஐயோ! மோசம் போனேன்!" என்று அலறிக்கொண்டு எழுந்தார்.

!

குருபத்தினியும் சீடனும் எங்கோ ஓடிவிட்டார்கள்! குருகுலத்தில் இருப்பவர்கள் ஓடிப்போன குற்றவாளிகளைத் தேடினார்கள். பிரகஸ்பதியும் எல்லா இடங்களிலும் தேடிவந்தார். எங்கும் கிடைக்கவில்லை.

வருணனும் தாரையும் கடலுக்கடியில் மறைந்து இருப்பதாகத் தெரியவந்தது. வருணன் தண்ணீருக்கு அதிபன் ஆனதால், தண்ணீருக்கடியில் இருப்பது அவனுக்குச் சுலபமான காரியம். மற்றவர் கண்ணில் படாமலிருக்க, குருபத்தினியை அங்கு அழைத்து வந்து, வைத்திருந்தான். கடலுக்கடியில் ஒளிந்திருக்கிறார்கள் என்று தெரிந்ததும், பிரகஸ்பதி தனது தவபலத்தால், "கடலே! வற்றிப்போக!" என்று சாபமிட்டார். அவ்வளவில் கடல் நீரவ்வளவும் வற்றி, வெறும் பள்ளமாக ஆனது, வருணனும், தாரையும் கீழே ஒரு பள்ளத்தில் இருப்பது தெரிந்தது. மிக அலங்கோலமான நிலையில், கடல் நீர் வற்றி, தங்களை மற்றவர்கள் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டதும், வருணன் எழுந்து வந்து, பிரகஸ்பதியை வணங்கி, குருபத்தினியை அழைத்து, அவரிடம் ஒப்படைத்தான். பிரகஸ்பதி குருபத்தினியை அழைத்துக்கொண்டு போனார், பின் வரண்டிருந்த கடலில் தண்ணீர் நிரம்பிவிட்டது. அத்துடன் வருணனுடைய குருகுலவாசம் முடிவடைந்தது.

(தொடரும்)





(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தங்கம் தனது கைக்கெடியாரத்தைப் பார்த் ள். 11-45! ஐயோ! பதினோரு மணிக்கெல் ம் இன்று கோர்ட்டுக்குப் போயிருக்க வண்டுமே என்று வேகத்துடன் வார்டை ட்டு வெளிவந்தாள். அன்று பதினொரு ணிக்கு சகுந்தலாவின் வழக்கின் தீர்ப்பு ாடப்பட்டிருந்தது. காலையில் எட்டுமணிக் ல்லாம் டாக்டர் சஞ்சீவி வீட்டுக்குத் தங்கம் ன்றிருந்தாள். சகுந்தலாவையும் பார்த் ள். பதினோரு மணிக்கு முன் திரும்பவந்து ர்ப்பதாகக் கூறிவிட்டு, ஆஸ்பத்திரியில் பல வலைகள் விட்டுவைக்கப்பட்டிருந்ததால், ந்துவிட்டாள். ஆஸ்பத்திரிக்குள் வந்ததும், னம் வெளியுலகை மறந்துவிட்டது. கடைசி ர்டை முடித்துக்கொண்டு வெளிக் கிளம்பும் ாழுதுதான், மணியாகிவிட்டதென்ற நினைவு வளுக்கு வந்தது. டாக்டர் சஞ்சீவி அன்று லை ஆஸ்பத்திரிக்கு வரவில்லை. பதினோரு ணி கோர்ட்டுக்குப் போய்விட்டு வருவ ாகக் கூறியிருந்தார். தங்கம் காரை எடுத்துக் காண்டு கோர்ட்டுக்குப் புறப்பட்டாள்.

காரைவிட்டு தங்கம் இறங்கும்பொழுது, க்கட்டுகளில் குலசேகரன் இறங்கிவந்து காண்டிருந்தான். தங்கம் காருக்கருகில் ன்றாள். ஒருவேளை இன்று தீர்ப்புப் படிக் படவில்லையோ?

குலசேகரனின் முகத்திலிருந்து அவளால் தையும் கண்டுகொள்ள முடியவில்லை.

குலசேகரன் அருகில் வந்தான். அப்பொழு ம் தங்கம் ஏதும் கேட்கவில்லை. தங்கம் ருக்குமிடத்தைக் கடந்து குலசேகரன் பாகும்பொழுது, "ஆறுமாதம்!" என்று சால்லிவிட்டுப் போனான்: அவனுடைய கார் புறப்பட்டது; பார்வையிலிருந்தும் மறைந் தது.

தங்கம் திகைத்து நின்றாள், ஆறுமாதம்! ஆறுமாதம் தண்டனை! சிறைத்தண்டனை! எதிர்பார்த்திருக்கவேண்டியதுதான்; ஆனால் தண்டனை என்று சொல்லப்படும்பொழுது அவள் மனம் பதறியது. அவளுக்குச் சட்ட திட்டங்களின் நுணுக்கங்கள் தெரியாது. ஆனால் சகுந்தலா தண்டிக்கப்பட்டது நியாய மற்ற செயலாக அவளுக்குத் தோன்றியது,

கோர்ட் உள்ளிருந்து சிலர் வெளிவந்து கொண்டிருந்தனர். வழக்கறிஞர்கள், வழக்குக் காரர்கள், கட்டுப் புத்தகங்களுடன் போய்க் கொண்டிருந்தனர். சகுந்தலாவைப் போய்ப் பார்த்துவிடலாமென தங்கம் கோர்ட்டுக்கு வந்தாள். கமலநாதன் அப்பொழுதுதான் வெளியே வந்தான்.

"கங்கராஜு-லேஷன்ஸ்."

குரல் கேட்டு கமலநாதன் திரும்பி நின்றான். தங்கம் நின்றுகொண்டிருந்தாள். அவள் குர லில் கடுமையும்; பார்வையில் லேசான வெறுப் பும் இருந்தன. எதற்காக அவள் அவ்வாறு சொல்லுகிறாள் என்பது கமலநாதனுக்குத் தெரியும்.

"ஆஸ்பத்திரியில் இருப்பாயென்றல்லவா நினைத்தேன்! வீட்டுக்கு வருகிறாயா?"

"இப்பொழுதில்லை! சற்று நேரங்கழித்து! நான் சகுந்தலாவைப் பார்க்கவேண்டும்!"

"அங்கு உட்காரவைத்திருப்பார்கள்! வா, பார்க்கலாம்!"

கமலநாதன் தங்கத்தைச் சகுந்தலா இருக்கு மிடம் அழைத்துப் போனான். தீர்ப்பு சொல்

லப்பட்டதும், தண்டிக்கப்பட்டவர்கள் ஜெயி லுக்கு அனுப்பப்படுவதற்குமுன் வைப்பதற் காகக், கோர்ட்டுக்குப் பக்கத்தில் ஒரு சிறு அறை இருக்கும். அந்த அறையில் சகுந் தலா உட்கார்ந்திருந்தாள். டாக்டர் சஞ்சீவி அவள் பக்கத்தில் இருந்தார். கமலநாதன் வெளியில் மற்றொரு வக்கீலுடன் பேசிக் கொண்டிருந்தான். தங்கம் உள் சென்றாள்.

சகுந்தலா காலையில் இருந்ததுபோலவே அமைதியுடன் உட்கார்ந்திருந்தாள். தண்ட னையை எதிர்பார்த்து முன்னதாகவே அவள் இருந்தாள். ஆதலால், "போதுமான சாட்சி யங்கள் இல்லையென்ற காரணத்தால், பிள்ளை யைக் கொன்றதாகக் கூறப்படும் குற்றத்தி லிருந்து எதிரியை விடுவிக்கிறேன். இரண்டா வது குற்றப்படி—தற்கொலை செய்துகொள்ள முயன்றதற்காக எதிரியைக் குற்றவாளிஎன்று கருதி ஆறுமாதம் தண்டனை விதிக்கிறேன்" என்று தீர்ப்பு வந்தபொழுது, அவள் முகத் தில் அசைவு எதுவும் காணப்படவில்லை.

சகுந்தலாவின் தோளைப் பற்றிக்கொண்டு தங்கம் பின்புறமாக நின்றாள்.

"நான் பதினொரு மணிக்கு வரமுடியாமற் போயிற்று. மன்னிக்கவும்,"

சகுந்தலா லேசாகச் சிரித்தாள் "பாதக மில்லை."

"நான் எதிர்பார்க்கவில்லை."

"நான் எதிர்பார்த்ததுதான். ஒருவகையில் நான் திருப்தியடைகிறேன். குழந்தையைக் கொன்றதாகச் சாட்டப்பட்ட குற்றம் இல்லை யென்றாகிவிட்டது."

இருவரும் பேசாமலிருந்தனர். தங்கத்தின் கண்களில் பனிப்படலம் படர ஆரம்பித்தது. டாக்டர் சஞ்சீவி எழுந்தார். "நான் போகி றேன்! சகுந்தலா! மனதிடத்துடன் எப்பொ ழுதும் நீ இரு!"

"சரி, டாக்டர்! உங்களுடைய ஆதர வுக்கு......" சகுந்தலா நிறுத்திக்கொண்டாள். அதற்குள் டாக்டர் சஞ்சீவி வெளியேறிவிட் டார்.

"டாக்டர்! இதைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்! ஜெயிலுக்குள் போகும் பொழுது எதையும் எடுத்துக்கொண்டு போகக்கூடாதாம்." சகுந்தலா ஒரு சதுரமான காகித உறையைத் தந்தாள். அதனுள் காகி தங்கள் வைக்கப்பட்டுச் சரியாக அது மூடப் பட்டிருந்தது.

"என்ன இது?" தங்கம் கேட்டாள்.

சகுந்தலா சற்றுத் தயங்கினாள்.

"நான் வைத்துக்கொள்ளுகிறேன்"

வெளியில் போலிஸ் வான் வந்தது. "உங் களுடைய உதவியை—அன்பை ஒருபோதும் மறக்கமாட்டேன்." தரையைப் பார்த்துக் கொண்டே சகுந்தலா சொன்னாள்.

"அப்படியெல்லாம் சொல்லாதே! மன திடத்துடன் இரு! நான் உன்னை வந்து அடிக் கடி பார்க்கிறேன்."

சகுந்தலா போலிஸ் வானில் போய் ஏறிக் கொண்டாள். தங்கம் மட்டும் அந்தத் தற்கா லிக சிறையில் உட்கார்ந்திருந்தாள்.

"வா, போகலாம்!" அவளுக்காகக் காத் திருந்த கமலநாதன் கூப்பிட்டான். தங்கம் எழுந்து வெளிவந்தாள்.

டாக்டர் சஞ்சீவி மூலையில் நின்றுகொண் டிருந்தார். "நான் டாக்டர் சஞ்சீவியுடன் போகிறேன்" என்று பதிலை எதிர்பார்க்காமல், தங்கம் போனாள். கமலநாதன் கோபத்துடன் தன் காருக்குப் போனான்.

"சகுந்தலாவைச் சென்னையில்தான் வைத் திருப்பார்களா?" காரில் போகும்பொழுது தங்கம் டாக்டர் சஞ்சீவியைக் கேட்டாள்.

"இன்னும் ஒரு வாரத்துக்கு இங்குதான் இருப்பாள். பின்பு வேலூர் கொண்டுபோய் விடுவார்களாம்! பெண்களுக்காகச் சிறை அங்கு இருக்கிறதாம்!"

"பின்பு அடிக்கடி பார்க்கமுடியாது."

"ஏன்? முன்பாக எழுதிப்போட்டு போனால், சந்திக்க அனுமதி தருவார்களாம்."

"உங்களுக்கு எப்படி இவ்வளவும் தெரி தது?"

"நான் வெளியில் வந்ததும், அங்கு நின் றிருந்த இன்ஸ்பெக்டரிடம் கேட்டேன். அவர் சொன்னார்."

டாகடர் சஞ்சீவி சிறிதுநேரம் பேசாமலிருந் தார். பின் தங்கத்தைப் பார்த்து, "நீ என்ன நினைக்கிறாய்? ஆறுமாதமும் தாங்கிக்கொண்டு சகுந்தலா உள் இருப்பாளா?" என்று கேட் டார்.

"இருக்கத்தானே வேண்டும்!"

"அப்படியில்லை" டாக்டர் சஞ்சீவி நெற்றி யைத் தடவிக்கொண்டார். அவருக்கு ஏற் பட்ட சந்தேகம் தங்கத்திற்கும் ஏற்பட்டது.

"மறுபடியும் அவர் அப்படிச் செய்யமாட்டாள்."

"அதுதான் நானும் நினைக்கிறேன்."

டாக்டர் சஞ்சீவியின் வீட்டருகே கார் நின்றது. காரைவிட்டு இறங்கியதும், டாக்டர் சஞ்சீவி "உன்னிடம் கேட்கவேண்டுமென்றிருந்தேன். வழக்கை நடத்திவந்த குலசேகரனுக்கு எவ்வளவு தரவேண்டியிருக்கும்? அவரை எனக்கு நன்ருகத் தெரியாது" என்று கேட்டார்.

"நான் கேட்டுவைக்கிறேன். போய்க் கேட்டதும், தட்டாமல் குலசேகரன் ஒப்புக்கொண்டான். போகும்பொழுது, அப்படியே பார்த்துவிட்டுப்போகிறேன்."

குலசேகரன் வீட்டுக்குப் போனபொழுது, அவன் மாடியில் இருந்தான். வீட்டில் வேருெருவரும் இல்லை.

"அஞ்சலையத்தை எங்கே?"

"ஊருக்குப் போயிருக்கிருர்கள்."

"சாப்பாட்டுக்கு என்ன செய்கிருய்?"

"ஓட்டலில்!"

"ஏன், நம்வீட்டில் வந்து சாப்பிடலாமே! இப்பொழுது சாப்பிட்டாயா, மணி இரண்டு ஆகப்போகிறது!"

"பசியில்லை!"

"வீட்டுக்குப் போகலாம் வா!"

"இப்பொழுது சிறிது நேரம் தூங்கவேண்டும். அப்புறம் மாலை அங்கு வருகிறேன்."

குலசேகரன் தனியாக இருக்க விரும்பினுன்.

"சரி, சேகா! இந்த வழக்கு நடத்தியதற்கு எவ்வளவு ஆயிற்று?"

"இரண்டுமாதம்."

"அதைக் கேட்கவில்லை. பணம் உனக்குத் தரவேண்டியது."

"ஒன்றும் தரவேண்டாம்."

"எனக்காகச் சொல்லாதே! டாக்டர் சஞ்சீவியும் கேட்கச்சொன்னுர். எவ்வளவு பீஸ் கொடுக்கவேண்டும்?"

"பீசும் வேண்டாம், கீசும் வேண்டாம். பேசாமல் போ!"

"இதரச் செலவுகள் இருக்குமே, அதாவது சொல்!"

"தங்கம்! என்னைத் தொந்தரவு செய்யாதே! போய்விட்டு, அப்புறம் வா!"

எப்பொழுதும் அமைதியாக இருக்கும் குலசேகரன், இன்று ஏன் இப்படிச் சிடுசிடுவென்று இருக்கிருன் என்று தங்கத்திற்குப் புரியவில்லை. வழக்குத் தோற்றுப்போனதில் அவன் மனம் சலித்துப்போயிருக்கலாம் என்று நினைத்துக்கொண்டு தங்கம் திரும்பினுள்.

அன்று இரவு சாப்பிட உட்கார்ந்தபொழுது, "இன்று நீ ஏன் அப்படிச் சொன்னுய்?" என்று கமலநாதன் கேட்டான்.

அப்பொழுதிருந்த ஆத்திரத்தில், ஏதோ தங்கம் கேட்டாள். என்னவென்று இப்பொழுது அவளுக்கு ஞாபகம்கூட இல்லை.

"என்ன கேட்டேன்?"

"கோர்ட்டை விட்டு வெளிவரும்பொழுது, 'கங்கராஜுலேஷன்ஸ்' என்று சொன்னுயே, ஏன்?"

"ஒரு வழக்கில், மிகவும் போராடி வெற்றி பெற்றிருக்கிறீர்கள், அதற்குச் சொல்லக்கூடாதா?"

"நான் ஒன்றும் செய்யவில்லை. குற்றவாளியைச் சட்டம் தண்டித்தது."

"அப்படியானுல், உங்களுக்குச் சொன்ன வாழ்த்தைத் திரும்பப் பெற்று சட்டத்திற்கு அதை சமர்ப்பிக்கிறேன்."

கமலநாதனுக்குக் கோபம் வந்தது. சுடச்சுட ஏதாவது சொல்லலாமென்று நினைத்தான். ஆனுல் பேசவில்லை. அறிமுகமாகாத இருவர் ஒரு ஹோட்டலில் உட்கார்ந்து சாப்பிடுவதைப்போல, இரண்டுபேரும் வேறு பேச்சில்லாமல் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

படுக்கைக்குப் போகுமுன் சகுந்தலா கொடுத்த கவர் பற்றிய ஞாபகம் வந்தது. தனது பையைத் திறந்து, அதை எடுத்தாள். சற்றுக் கனமாக இருந்தது.

உள்ளே என்ன இருக்குமோ? நான்குபுறமும் சரியாக மூடப்பட்டிருந்தது. சகுந்தலாவின் சர்டிபிகேட், வேறு முக்கிய பத்திரங்கள் இவைகள் இருக்கலாம்! எவையிருந்தாலென்ன?

"டாக்டர்! இதைப் பத்திரமாக வைத்திருங்கள்!"

காலையில் சகுந்தலா கேட்டுக்கொண்டது தங்கத்தின் ஞாபகத்துக்கு வந்தது. அலமாரியைத் திறந்து, அதன் மூலையில் இருந்த, சிறிய மரப்பெட்டியை எடுத்து, அதனுள் அந்த உறையைத் தங்கம் அடக்கம் செய்தாள்.

* * *

மறுநாள் காலை எட்டுமணிக்கெல்லாம் சிறைச்சாலைக்குமுன் குலசேகரன் தனது காரை நிறுத்தினுன். சகுந்தலா என்ற கைதியைப் பார்க்கவேண்டுமென்று உள்ளே தனது கார்டை அவன் கொடுத்தனுப்பினுன். அவளுடைய வக்கீல் என்ற முறையில் கைதியைப் பார்க்கும் உரிமை அவனுக்கிருந்தது.

குலசேகரன் உள்ளே அழைக்கப்பட்டான். ஜெயிலர் அறையில் அவன் காத்திருந்தான்.

ஜன்னல் கம்பிகளின் வழியாகப் பார்க்கும் பொழுது, சகுந்தலாவை ஒரு பெண் வார்டர் அழைத்துவருவது தெரிந்தது.

சகுந்தலா வந்தாள், அறையின் மூலையில் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். அவளுக்கு முன்னதாக போடப்பட்டிருந்த நாற்காலியில் குலசேகரன் அமர்ந்தான். ஜெயிலர் தனது வேலைகளைக் கவனித்தார். அவர்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பது இவர் காதில் விழவில்லை. ஒரு வக்கீல் தன் கட்சிக்காரரிடம், என்ன பேசுறார் என்பதை மற்றவர்கள் ஒட்டுநின்று கேட்கவும் கூடாது.

அவர்களும் அதிகம் பேசவில்லை. ஓரிரு வார்த்தைகள் மிகவும் சிரமத்துடன் தேடிப் பிடித்துக் கேட்டுக்கொண்டார்கள். கடைசியாக குலசேகரன் எழுந்தான். "அடுத்த வாரம் வேலூருக்கு நான் வருவேன். பார்க்கிறேன்."

சகுந்தலா தலையைக் குனிந்துகொண்டு உட்கார்ந்திருந்தாள்.

குலசேகரன் பின்னால் பார்த்துக்கொண்டு, சற்றுத் தலையைத் தாழ்த்தி, "சகுந்தலா! மறந்துவிடாதே!" மிக மெதுவாகச் சொன்னான்.

சகுந்தலா நிமிர்ந்து பார்த்தாள். குலசேகரன் அசட்டுச் சிரிப்புடன் விடைபெற்றுக் கொண்டான்.

"எழுந்திரு போகனும்!" வார்டர் வந்து கூப்பிட்டாள். சகுந்தலா எழுந்தாள். இன்னும் ஆறுமாதம்!

சிறைச்சாலையை விட்டதும், குலசேகரன் தங்கத்தின வீட்டிற்குப் போனான். முதல் நாள்தான் கடுமையாக இருந்தது கண்டு, தங்கம் மனவருத்தத்துடன் திரும்பியதாக அவனுக்குப் பட்டது. வழக்கு நடத்தியதற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று அவள் கேட்டது அவனுக்குக் கோபமாகத்தான் இருந்தது. ஆனால் அவன் இருந்த நிலை மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்?

"டாக்டரம்மா ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டார்களே!" என்று வேலைக்காரன் சொன்னான்.

"ஆஸ்பத்திரிக்குப் போகலாமா?" என்று குலசேகரனுக்குத் தோன்றியது அங்கு அவளைக் கண்டுபிடித்து பேசுவது முடியாது. டாக்டர்கள், நோயாளிகள், மருந்துகள்—ஒரே கூட்டமாக இருக்கும். டெலிபோனில் பேசிவிடலாம் என்று டெலிபோன் புத்தகத்தைப் புரட்டி எண்களைக் கண்டுபிடித்தான்.

"டாக்டர் தங்கத்துடன் பேசவேண்டும்!"

"நம்பர் 12."

டக்டக் என்ற சத்தம் கேட்டது.

"யார் வேண்டும்?"

"டாக்டர் தங்கம்!"

"சற்று இருங்கள்."

போனில் முனகல் சத்தம் வந்தது. பிறகு போன் எடுக்கப்பட்டது.

"தங்கம் பேசுகிறேன்."

"தங்கமா? சேகரன் பேசுகிறேன். நேற்று மாலை வரமுடியவில்லை."

"நான்கூட நேற்று வீட்டில் தங்கவில்லை."

"நான் சொன்னதில் ஏதாவது கோபமா! மன்னித்துவிடு, ஏதோ அலுப்பில் சொல்லிவிட்டேன."

தங்கம் சிரித்துக்கொண்டாள். "அதெல்லாம் ஒன்றும் இல்லை! எனக்கு வேலை அதிகமாக இருக்கிறது. மறுபடியும் உன்னை எப்பொழுது பார்க்கலாம்!"

"நாளை மாலை உன்னைப் பார்க்கிறேன்."

"சரி!"

குலசேகரன் போனைக் கீழே வைத்தான். திரும்பும்பொழுது, மாடிப்படிக்கட்டில் கமலநாதன் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. அவன் பேசிக்கொண்டிருப்பதை கமலநாதன் கவனித்திருக்கவேண்டும்.

இருவரும் காலை வணக்கங்களைப் பறிமாறிக் கொண்டனர்.

"இவ்வளவு சீக்கிரம் எங்கு கிளம்பிவிட்டீர்கள்?" என்று கமலநாதன் கேட்டான்.

"சீக்கிரமென்ன மணி ஒன்பதாகப்போகிறது. நீங்கள் எழுவதற்கு நாழியாகிவிட்டது போலும்."

நான் எப்பொழுது எழுந்தால் இவனுக்கென்ன என்று கமலநாதன் நினைத்துக் கொண்டான். "இரவு படுக்கப்போகும் பொழுது நாழியாகிவிட்டது. அதனால்தான்!"

இருவருக்கும் பேசுவதற்கு வேறொன்றும் பொருள் அகப்படவில்லை.

"உங்கள் நேரத்தை வீணாக்குகிறேன். நான் வருகிறேன்." குலசேகரன் வெளியேறினான்.

இவன் எதற்காக இப்பொழுது வந்தான்? தங்கத்தைப் பார்ப்பதற்குத்தான். போனில் பேசியதும் அவளுடன். ஆனால் தன்னிடம் அதைப்பற்றி ஏன் ஒன்றும் சொல்லவில்லை? கமலநாதன் யோசித்துக்கொண்டே குளிக்கும் அறைக்குப் போனான்.

(தொடரும்)

வினாவும் விளக்கமும்

ா : பண்டித நேருவின் ஐரோப்பியச் சுற்றுப்பிரயா ணம்பற்றிக் கருத்து என்ன ?

விளக்கம்: பண்டித நேரு உருசியா, போலந்து, கோசிலேவியா, இத்தாலி. இங்கிலாந்து, கிப்து போன்ற பல்வேறு நாடுகளுக்கும் சென்றார்; குறிப்பாக உருசியா, யூகோசிலே வியா ஆகிய இரண்டு நாடுகளையும் நன்கு ற்றிப்பார்த்தார்; அந்நாடுகளின் இயற்கை -செயற்கைச் செல்வங்களையெல்லாம் கண்டு ளித்தார்; நாட்டின் தலைவர்களோடும் மக்க ளோடும் உரையாடி மகிழ்ந்தார்; விருந்து விழாக்களிலும் வரவேற்புக் கூட்டங்களிலும் லந்துகொண்டார்; எங்கணும் நல்லுரை ழங்கினர்; எல்லோரிடமும் நல்லுறவு காட் னர்; அவருக்கு எல்லா இடங்களிலும் பொதுமக்கள் நல் வரவேற்பு வழங்கினர்; ட்டின் தலைவர்களெல்லாம் அவரை நாவா ப் பாராட்டினர்; பொதுமக்கள் அன்புக் ாணிக்கை செலுத்தினர்; சுருங்கக் கூறினல் ண்டித நேருவுக்குச் சென்ற இடமெல்லாம் பெருமையும், புகழும் கிடைத்தன!

இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த ண்டித நேருவுக்கு இவ்வளவு புகழும் பெரு மையும் ஏற்படுவது நமக்கெல்லாம் மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றுதான். அதில் எள்ளளவும் யமில்லை.

இதற்குமுன்னல் அமெரிக்கா, இலங்கை, இந்தோனேசியா, பிரிட்டன், சீன போன்ற நாடுகளிலெல்லாம் சுற்றுப்பயணங்கள் செய் தார். அப்பொழுதும் அவருக்கு எல்லா இடங் களிலும் புகழும் பெருமையும் கிடைத்தன.

அகில உலக அரங்கில் பண்டித நேரு புகழும் பெருமையும் அடைகிருர் என்பது மகிழ்ச்சியுறத்தக்கதொன்றேயாகும்.

இவ்வளவு வரவேற்பும், வாழ்த்தும், பாராட் டும் அவர் இந்திய துணைக்கண்ட ஆட்சியின் முதல்வர் என்ற முறையில் ஆங்காங்கு அளிக் கப்படுகின்றன என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. அப்படியானல், பண்டித நேரு வுக்குத் தனிப்புகழே கிடையாதா? என்று சிலர்க்கு ஆத்திரத்தோடு கேட்கத்தோன்றும். அறவே கிடையாது என்று சொல்லவில்லை; ஓரளவுக்கு உண்டு; அதற்கு மட்டுமேயல்ல இவ்வளவு வரவேற்பும் வாழ்த்தும்; பண்டித நேருவோடு முதல்வர் பதவியும் சேருவதால் தான் இவ்வளவும் என்கிறோம்.

அந்த முதல்வர் பதவி, இத்தகைய சுற்றுப் பயணங்கள் மூலம், நேருவின் நிலையை உயர்த் திற்ற? அல்லது இந்தியாவின் நிலையை உயர்த் திற்ற? என்று ஆராய்ந்துபார்த்தால், நேரு வின் நிலையைத்தான் உயர்த்திற்றே ஒழிய, இந்தியாவின் நிலையை உயர்த்தவில்லை என் பதைத் தெள்ளத் தெளிவாக அறிந்துகொள் ளலாம்.

உலகின் முக்கியமான நாடுகளின் ஆட்சித் தலைவர்களோடு, பண்டித நேருவை ஒப்பிட் டுப்பார்க்கும்போது, அவர்கள் வளர்ந்திருக் கும் அளவுக்குப் பண்டித நேருவும் வளர்ந் திருக்கிருர் என்பது படுமே ஒழிய, அவர்களின் நாடுகள் வளர்ந்திருக்கும் அளவுக்கு இந்தியா வளர்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்பதை எவரும் உணர்ந்துகொள்ளலாம்.

மற்றைய நாட்டுத் தலைவர்கள் தங்களை வளர்த்துக்கொள்வதற்காகச் செலுத்தும் கவனத்தைவிட, தங்கள் நாட்டை வளர்ப்பதற் காகச் செலுத்தும் கவனம் ஏராளமாகும். ஆனல் பண்டித நேருவின் நடவடிக்கைகள் நாட்டைவிட, அவரை வளர்ப்பதற்கே பெரி தும் பயன்பட்டு வருகின்றன.

அமெரிக்கா, உருசியா, பிரிட்டன், சீன போன்ற நாடுகளின் தலைவர்கள் தங்கள் தங்கள் நாடுகளில் அரியவை பலவற்றை ஆற்றிவைத்துவிட்டு, அவற்றை வேடிக்கை காணும்படி பிறநாட்டுத் தலைவர்களைக் கூவி அழைத்து, அவர்களுக்கு வேடிக்கைகாட்டி அகமகிழ்கிருர்களே ஒழிய, வேறுவேறு நாடு

களுக்கு ஓய்யாமல் ஓடிஓடி வேடிக்கைப்பார்த்து மகிழும் பண்பைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் இந்தியப் பேரரசின் முதல்வர் பண்டித நேரு தான் அந்தப் பண்பை முழுக்க முழுக்க கொண்டிருக்கிறார்.

தொழிற்றுறையிலும், அறிவியற்றுறையிலும் வேறுநாட்டவர் செய்துகாட்டாத அரியவைகளைத் தாம் தமது நாட்டில் செய்துகாட்டியிருப்பதாகக் கூறி அகமகிழும் பணியிலேதான் பிறநாட்டுத்தலைவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பண்டித நேரு, அமெரிக்காவிலும், சீனாவிலும், உருசியாவிலும் முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இல்லாத அரிய சாதனைகளைக் கண்டு களித்தார். ஆனால் பிறநாட்டுத் தலைவர்கள் இந்தியாவிற்கு வந்தால், தங்கள் தங்கள் நாட்டில் இல்லாத எந்த இற்றைக் கால அரிய சாதனையை இங்கு கண்டு களிப்பார்கள்? ஏதொன்றும் இல்லையே! பிறநாட்டவர்கள் வந்தால், இந்தியாவில் காண்பிப்பதற்காக இந்திய அரசியலார் குறிப்பிடுபவைகள் தாசுமகால், குதுப்மினார், அசோகத்தூண், அசந்தா குகை, எல்லாரா சிற்பம், மாமல்லபுரம் கற்கோயில், தஞ்சை நந்தி, மதுரை மண்டபம், திருவாரூர் தேர், தில்லைப் பொன்னம்பலம் இன்னபிறவாகவல்லவா இருக்கின்றன? இந்தச் சாதனைகளுக்கு உரியவர்கள் இற்றைக் காலத்தவர்கள் அல்லரே! இந்தியாவின் வளர்ச்சிக்கு அறிகுறியாக எவ்வளவு காலத்திற்கு இவற்றை வருவோர்க்கெல்லாம் காண்பித்துக்கொண்டிருப்பது? உலகச் சுற்றுப்பயணங்களால் நேரு வளர்வது தெரிகிறதே ஒழிய, நாடு வளர்வது எந்த வகையிலும் தெரியவில்லையே!

நேருவைப் பொறுத்து நாட்டுக்குப் புகழ் வளரும் என்று கூறுபவர்கள் இருப்பார்களாயின், அப்படி ஏற்படும் புகழ் நேரு மறையும் போது அவரோடு சேர்ந்து மறைந்துபோகுமே என்றுதான் அவர்களுக்கு உரைத்திடவேண்டியிருக்கிறது. நேரு தம்மை வளர்த்துக் கொண்ட அளவுக்கு நாட்டையும் சேர்த்து வளர்த்திருப்பாரேயானால், நேரு மறைந்தாலும், நேருவின் புகழ் நாட்டின் புகழாக மாறி என்றென்றும் நிலவும்.

இந்தியத் துணைக்கண்டமும், அதிலுள்ள மக்களும் இருந்த நிலையிலேயே இருந்து, நேரு மட்டும் உலகோர் புகழும் அளவுக்கு உலகச் சுற்றுப்பயணம் அடிக்கடி புரிந்துவருகிறார் என்றால், அதனால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் என்ன நன்மை?

ஒவ்வொரு சுற்றுப்பயணமும் முடிந்தவுட இந்தியாவிற்குத் திரும்பும் நேரு, இந்தியாவி அந்நாடுகளில் கண்ட நிலைமையை உருவாக நினைத்து வெற்றிபெறுகிறார் என்றால், அதி ஏதாவது பொருளிருக்கமுடியும். சென் உலகப் பெரும்போருக்குப் பிறகு மற்ற நாடு கள் முன்னேறிவரும் விரைவோடு இந்தியா வின் வளர்ச்சியின் விரைவை ஒப்பிட்டு பார்த்தால் இந்தியா மிகமிகப் பின்தங் யிருக்கிறது என்பதை எவரும் ஒப்புக்கொள் வர். வெள்ளையர்கள் தொடர்ந்து ஆட்சிபுரி திருந்தால் எத்தகைய வளர்ச்சி ஏற்பட்டிரு குமோ அதே அளவு வளர்ச்சிதான் காங்கிரசு ஆட்சியில் ஏற்பட்டிருக்கிறது என்று கூற வேண்டும். வெள்ளையர் காலத்து ஆட்சியை விட காங்கிரசுக்காரர்கள் ஆட்சியில் அதுவு பண்டித நேருவின் ஆட்சியில் நிர்வாக ஊழல் கள் மிகமிக மலிந்துவிட்டன என்பதை யாவ ரும் நன்கு அறிவார்கள்.

பண்டித நேரு உருசியாவில் சுற்றுப்பயண செய்யும்போது, ஓராண்டு காலத்திற்கு முன் வெறும் பனிப்பாலைவெளியாக இருந்த சைபீ ரியாவின் ஒருபகுதி இப்பொழுது கோதுமை விளையும் கழனியாக மாற்றப்பட்டிருக்கும் தன்மையை நேரில் கண்டு உளம் பூரித்து போனாராம். பனிபபாலைவெளியைக் கோது மைக் கழனியாக மாற்றும் வேலையில் ஈடுபட் டிருந்த பொறியர்களும் (என்சினியர்) பிற பணியாளர்களும் பகல் முழுதும் வேலைசெய்து விட்டு இரவு நேரத்தில் லாரிகளில் படுத்து உறங்கினர் என்றும், லாரிகளையே தற்காலிக இருப்பிடமாகக் கொண்டிருந்தனர் என்றும் பண்டித நேருவுக்கு, அருகிலிருந்தோர் அறி வித்தார்களாம், நேருவின் ஆட்சியின்கீழ் இருக்கும் திராவிடத்தின் நெய்வேலிப் பகுதி யில், நிலத்துக்கடியில் இருநூறுகோடி டன் பழுப்பு நிலக்கரி இருக்கிறது என்று திட்ட வட்டமாகத் தெரிந்திருந்தும், அதனை வெட்டி எடுக்க பல்லாண்டுகள் முயற்சித்தும், முயற்சி இன்னமும் வெற்றிபெறாத நிலையிலிருக்கும் காட்சியை இங்கே நாம் கண்டுகொண்டிருக் கிறோம். பண்டித நேரு உருசியாவில் காணும் வேடிக்கை, இங்கே நமது வேதனையைப் போக்குவதற்கான அருமருந்தாக அமைய வில்லையே! இப்படிப் பலப்பல.

இந்தியாவை வளப்படுத்தி, அரிய சாதனை கள் பலவற்றை ஆற்றிவிட்டுப் பிறகு உல கோரை வேடிக்கை பார்க்க அழைக்கவும் தாம் வேடிக்கை பார்க்க பிறநாடுகளுக்கு

ாகவும் ஆன நிலைமையைப் பண்டித நேரு
ற்படுத்துவாரானால் அப்பொழுது வேண்டு
னால், அவரது சுற்றுப்பயணம் மிகமிகப்
பாற்றிப் பாராட்டப்படத்தக்கதாக இருக்
ம்.

இந்தியாவைக் காட்டிலும் எல்லாத் துறை
ளிலும் பன்மடங்கு மேலோங்கி நிற்கும் நாடு
ளைச் சேர்ந்த ஐசனோவரும், ஈடனும், புல்கா
னினும், மா-சே-துங்கும் பண்டித நேருவைப்
பாலவா ஓயாமல் பிறநாடுகளில் வேடிக்கைச்
ற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கின்ற
ர்? இல்லையே! அவர்களெல்லாம் வேடிக்
கைச் சுற்றுப்பயணத்தில் தங்கள் கவனத்
தைச் செலுத்தாமல் தங்கள் நாட்டை மேலும்
மேலும் வளர்ச்சியுறச் செய்வதிலே கண்ணுங்
கருத்துமாக இருக்கும்போது, எல்லாவகையி
லும் மிகமிகப் பின்தங்கிய இந்தியாவைச்
சேர்ந்த பண்டித நேரு அடிக்கடி சுற்றுப்பய
ணத்தில் ஈடுபடுவது எவ்வளவு வேதனை தரக்
கூடிய செயல் என்பதை இந்நாட்டு ஏழைப்
பொதுமக்கள் எண்ணிப்பார்க்கத்தானே செய்
வர்.

இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த
நேரு வளர்கிறார் என்று எண்ணுயபோது
மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது என்றாலும்
இந்தியா வளரவில்லையே அதுவும் திராவிடம்
வளரவில்லையே என்று எண்ணும்போது,
அந்த மகிழ்ச்சியையும் அழிக்கும் அளவுக்கு
வேதனை ஏற்படத்தான் செய்கிறது!

எனவே பண்டித நேருவின் சுற்றுப்பயணம்
அவருக்குப் பயன்படுகிறது; ஆனால் நாட்டிற்
குப் பயன்படவில்லை.

❖ ❖ ❖

வினா : திராவிட முன்னேற்றக் கழகம் கைத்தறித் துணிகளை ஆதரிப்பதற்குக் காரணம் என்ன?

விளக்கம் : மக்களுக்குத் தேவையான பொருள்களின் உற்பத்தி பொறித்தொழிலின் மூலம் செய்யப்படவேண்டுமா அல்லது கைத்தொழிலின் மூலம் செய்யப்படவேண்டுமா என்று கேட்டால், பொறித்தொழிலின் மூலம் செய்யப்படவேண்டும் என்பதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தன் கொள்கையாக வைத்திருக்கிறது.

ஒருபொருளைக் கைத்தொழிலைவிட பொறித்தொழில், எளிதாகவும், ஏராளமாகவும், நயமாகவும், நல்லதாகவும், உறுதியாகவும், உறு பயன் தருவதாகவும் செய்யுமேயானால், அந்தப் பொருளைப் பொறித்தொழில் மூலமாக உற்பத்தி செய்யும் முறையைத்தான் தி. மு. கழகம் வற்புறுத்துகிறது. மனிதனின் உழைப்பைக் குறைத்து, பயனை மிகுவித்து, இன்பத்தைப் பெருக்குவதற்கான வழிவகைகளைத்தான் மனிதன் கடைப்பிடிக்கவேண்டும் என்று தி. மு. கழகம் திட்டவட்டமாகக் கூறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் கைத்தறித் துணியை ஆதரிப்பதற்குக் காரணம், பொறித்தொழில் கூடாது கைத்தொழிலே ஆதரிக்கப்படவேண்டும் என்ற கொள்கை அல்ல, கைத்தறியை நம்பி வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்ற நிலைமைதான். கைத்தறி ஏதோ போதுமான வருவாயை இப்போதைய நிலைமைக்குத் தருவதாக இருப்பதாலும், அதனை நம்பி வாழ்பவர்களின் தொகை இலட்சக்கணக்கில் அமைந்திருப்பதாலும், அவர்கள் கைத்தறித் தொழிலை விட்டு வேறு தொழில் செய்வதற்கோ அல்லது கற்றுக்கொள்வதற்கோ போதுமான தகுதியும் திறமையும் அற்றவர்களாக இருப்பதாலும், இப்போதைய நிலையில் அவர்களுக்கு போதுமான வருவாய் தரக்கூடிய வேறு தொழில் ஏதும் கிடைப்பது மிகமிக அரிதாக இருப்பதாலும் தி. மு. கழகம் நிலைமையை ஒட்டிக் கைத்தறித் துணிகளை ஆதரிக்க முனைந்துள்ளது. 'கைத்தறித் துணிகளை வேண்டுமென்றே ஆதரிப்பதன்மூலம், கைத்தறித் தொழிலை நம்பி வாழும் ஏழை நெசவாளர்களின் துயரத்தையும், தொல்லையையும் சிறிதளவு போக்கியவர்களாகிறோம்.

உலகம் சென்று முடியும் காலம் வரையில், நீடூழிக்காலம், கைத்தறி வாழவேண்டுமென்றோ, அல்லது அதனை நம்பி வாழ்வோர் பரம்பரை பரம்பரையாக அதனையே நம்பி வாழவேண்டுமென்றோ கழகம் கூற முன்வரவில்லை. இப்பொழுது கைத்தறியை நமபி வாழ்வோரின் ஆயுட்காலம் வரையிலுமாவது, கைத்தறியை நசித்துப்போகாமல் காப்பாற்றித்தந்தால், அதனால் அவர்களுக்கு ஓரளவு பலன் ஏற்படுமே என்று கருதிதான் கழகம் கைத்தறியை ஆதரிக்கிறது, நெசவாளர் பரம்பரையைச் சேர்ந்த வருங்காலத்தவர் வேறு வளருந் தொழில்கள் படிப்படியாகப் புகுந்துவிடவேண்டும் என்று கழகம் வற்

புறுத்தி வருகிறதேயல்லாமல், வருங்காலத்தவர்க்கும் கைத்தறியைக் காப்பாற்றிக் கொடுக்கவேண்டும் என்று கூறவில்லை. வருங்காலத்தில் எப்பொழுதேனும் ஒருபொழுது கைத்தறியின்மூலம் நெசவு நடப்பது மறைந்து எல்லா நெசவுகளும் பொறிகளின்மூலம் நடைபெறவேண்டும் என்றுதான் கழகம் கருதுகிறது. கைராட்டையில் நூற்கப்படும் நூலைத் தள்ளிவிட்டுப், பொறிகளால் நூற்கப்படும் நூலை ஏற்றுக்கொள்ளுகிற நிலைமைக்கு இற்றைக்காலம் எப்படி இப்பொழுது வந்துவிட்டதோ, அதுபோலவே கைத்தறிகளைத் தள்ளிவிட்டுப் பொறித்தறிகளை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு வருங்காலம் வந்தேதீரும். ஆனால் கைத்தறிகளை நம்பி வாழும் இந்தத் தலைமுறையினரை அவர்களது ஆயுட்காலம் வரையிலுமாவது அவர்களைக் காப்பாற்றுவோம் என்ற அடிப்படைக் கருத்தில்தான் கழகம் கைத்தறித்துணிகளை ஆதரிக்கச் சொல்லிப் பொதுமக்களைத் தூண்டுகிறது.

எனவே தி. மு. கழகம் கைத்தறித்துணிகளை ஆதரிப்பதற்குக் கொள்கை அல்ல, நிலைமைதான் காரணம்.

●●

பறக்கும் தட்டுகள்

சிலநாட்களுக்கு முன்பு, பறக்கும் தட்டுகள் பற்றிய பரபரப்பான செய்திகள், செய்தித்தாள்களில் அடுக்கடுக்காய் நாள்தோறும் வந்துகொண்டிருந்தது யாவர்க்கும் நன்கு நினைவிருக்கலாம். அந்தப் 'பறக்குந் தட்டுகள்' இப்பொழுது எங்கேயோ (?) மறைந்திருப்பதால் உலக வானில் அமைதி நிலவுகிறது!

பறக்குந் தட்டுகள் மக்களின் கற்பனையில் பிறந்து வளர்ந்த கற்பனைப் பொருள்களேயொழிய, அவை உள்ளபடியே வானில் பறப்பன அல்ல என்ற கருத்தை, அமெரிக்கா வான் படையைச் (Air Force) சார்ந்து இடெய்ட்டனில் (Dayton) உள்ள வானிலை நுண்ணறிவு நிலையத்தார் (Air technical intelligence center) வெளியிட்டுள்ளார்கள்.

வானத்தில், தொலைவிலுள்ள காட்சிகள், வியப்புக்குரிய நிகழ்ச்சிகள், ஐயப்பாட்டிற்குரிய இடங்கள் என்று கருதப்பட்ட சுமார் 3500-க்கு மேற்பட்ட நிலைமைகளைத், துருவித்துருவி ஆராய்ந்து பார்த்ததில் பறக்குந்தட்டுகளோ, ஒளிவீசும் கருவிகளோ, போர்ப்படைக் கருவிகளோ எதுவும் காணப்படவில்லை என்று அவ் ஆராய்ச்சி நிலையத்தார் அறிவிக்கிறார்கள்.

பறக்குந் தட்டுகள் பறக்கின்றன என்று சொல்லப்பட்ட திக்குகள் நோக்கி, சுமார் 75-க்கு மேற்பட்ட நுட்பம் வாய்ந்த காமிராக்களை வைத்துப் படங்கள் எடுத்துப் பார்த்ததில், ஒன்றில்கூட தட்டுக்கள் போன்றோ, சிகரெட்டுகள் போன்றோ, குப்பிகள் போன்றோ பொருள் எதும் படமாக விழவில்லையாம். உலகிலுள்ள வானிலை ஆராய்ச்சிக்கூடங்களிலுள்ள தொலை நோக்கு ஆடிகளை (Telescopes) ஓயாமல் பயன்படுத்திக்கொண்டிருக்கும் வானியலறிஞர்களில் யாரும், பறக்கும் தட்டுகளைக் கண்டதாகச் செய்தி ஒன்றும் இதுகாறும் வெளிவரவில்லை என்ற உண்மையையும் அமெரிக்க வான்படை ஆராய்ச்சி நிலையத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே 'பறக்குந்தட்டுகள்' உலகிலுள்ள எந்த ஒரு நாட்டிலிருந்தோ அல்லது வேறு கோள்களிலிருந்தோ வானில் உலாவும்படி விடப்பட்டவை அல்ல; அவைகள் சிலரின் கற்பனை உள்ளங்களிலிருந்து தோன்றியவைகளேயாகும் என்பதை உணரலாம்! பறக்குந் தட்டுகள் இதுகாறும் கற்பனை உலகில்தான் பறந்திருக்கின்றன; காணும் உலகில் அல்ல!

தையற் கலை

கே.பி.சுந்தரம், G.C.T.

ஒப்பன் காலர் ஷர்ட்

• அளவுகள்

ப்புவரை முதுகு நீளம்	$16\frac{1}{2}$	அங்குலம்
ழு நீளம்	34	,,
புச் சுற்றளவு	36	,,
இத்தோள் அளவு	$8\frac{1}{2}$	,,
ரைக்கை நீளம்	$10\frac{1}{2}$	,,
த்துச் சுற்றளவு	15	,,

படம்—1

ல் இருந்து 0 வரை $34\frac{1}{2}$ அங்.
(முழு நீளம் $+\frac{1}{2}$ அங்.)

2-ல் இருந்து 0 வரை $16\frac{1}{2}$ அங்.
(இடுப்பு வரை முதுகு நீளம்)

3-ல் இருந்து 0 வரை 8, 3/8 அங்.
($\frac{1}{4}$ மார்பு அளவில் $\frac{1}{4}$ அங். குறைவு)

4-ல் இருந்து 0 வரை 2 அங்.
(1/6 கழுத்து அளவில் $\frac{1}{2}$ அங். குறைவு.)

5-ல் இருந்து 0 வரை 4 அங்.
(1/6 கழுத்து அளவு $+1\frac{1}{2}$ அங்.)

6-ல் இருந்து 0 வரை 9 அங்.
($\frac{1}{4}$ மார்பு அளவு 6, 14 இணைப்பு)

7-ல் இருந்து 6 வரை $1\frac{1}{2}$ அங்.

8-ல் இருந்து 7 வரை $\frac{1}{2}$,,

9-ல் இருந்து 3 வரை $12\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பு அளவு $+3\frac{1}{2}$ அங்.)

10-ல் இருந்து 2 வரை $12\frac{1}{2}$,,
(3, 9-க்கும் உள்ள அளவு)

11-ல் இருந்து 1 வரை $12\frac{1}{2}$,,
(2, 10-க்கும் உள்ள அளவு)

12-ல் இருந்து 11 வரை 2 அங்.

13-ல் இருந்து 10 வரை $\frac{3}{4}$ அங்.

14-ல் இருந்து A வரை 3 அங்.



Regd. No. M 6296

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு
சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- **வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை**

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி டெலிபோன் நெ. 22

அவ்வை புத்தக நிலையம்

கம்பார் (பேரா)

அறிஞர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன் டாக்டர் மு. வரதராசனார், மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரின் கருத்துக்குவியல்களும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், தாயகத்திலிருந்து வெளியாகும் வார, மாத இதழ்கள் யாவும், மற்றும் சினிமா வசன பாட்டு புத்தகங்களும் சில்லரையாகவும் மொத்தமாகவும் கிடைக்கும்.

மற்றும் கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் கல்கண்டு, பேசும்படம் முதலான பத்திரிகைகளும் கிடைக்கும்

பள்ளி மாணவர்களுக்குத் தேவையான புத்தகம், நோட்புக், பென்சில் முதலிய இதர சாமான்களும் விலை சரசமாகக் கிடைக்கும்

மலேயாவிலுள்ள தினசரி வார மாத இதழ்களும் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு தக்க கழிவு தரப்படும்

நிர்வாகிகள்

சி. அண்ணமலை, கோ. வரதராசன்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS